சுன்னுகம், மன்மத புரட்டாதி உக ✵ (9 -.10 - 55) ஞாயிறு

# ஈழகேசரி

EELAKESARI - NATIONALIST TAMIL WEEKLY

மலர் 26 இதழ் 15 | தேசிய வார வெளியீடு ○ கிறுவியவர் : நா. பொன்னையா | தனிப் பிரதி சதம் 10

சாம்பசிவம் அன்ட் கோ.
38, கஸ்தூரியார் வீதி : பெரியகடை : யாழ்ப்பாணம்

H. M. V. — றேடியோ, கிராமபோன், றெக்கோட்டுகள்
விற்பனைக்கிருக்கின்றன.

N. Sambasivam & Co.,
38, Kasthuriar Road : Grand Bazaar : JAFFNA

★ எதிர்வரும் தேர்தலிலே சுவையான மோதல்களுக்கும் பலப் பரீட்சைகளுக்கும் குறைவிருக்காது என நம்பப்படுகிறது.

# மோதல்கள் ஏற்படுமா?

## அரசியற் கட்சிகள் அணிவகுப்பு

## மேயர் பதவிக்குச் சண்டை

## 'தமிழ் வேண்டாம்' என்ற கூக்குரல்




கொழும்பு, 6-10-55

பிரதிநிதிகள் சபை விரைவிற் குலைக்கப்பட்டதும் பொதுத்தேர்தல் எப்போது நடைபெறும் என்பதையிட்டுப் பலவகையான சோதிடங்களும், ஊகங்களும் புகைந்து கொண்டிருக்கின்றன. எனினும் இன்றுள்ள பிரதிநிதிகள் சபையின் ஆயுள் அபூரணமானது என்பது மட்டும் ஓரளவு நிச்சயமாகத் தெரிகிறது. எந்தக்கணமும் பொதுத் தேர்தலையிட்ட அறிவிப்பு வெளியாகலாமாதலால், களத்திலே குதிக்கவிருக்கும் அரசியற் கட்சிகள் கச்சையை வரிந்து கட்டிக்கொண்டு, அணிவகுப்பின் ஆரம்பச் சடங்குகளைச் செய்து கொண்டிருக்கின்றன.

செல்வாக்கு வாய்ந்த எதிர்க்கட்சிகள் சில, கைகோத்துக்கொண்டு 'போட்டியிடா உடன்படிக்கை' செய்து கொண்டிருக்கையில், ஐக்கிய தேசியக் கட்சி, எல்லாத் தொகுதிகளிலும் போட்டியிட்டே தீருவதென முனைந்து நிற்கிறது. எனினும் ஐக்கிய தேசியக் கட்சியிலுள்ளவர்கள் "ஒவ்வொருவர் ஒரு திசையில் ஒவ்வொருவர்க்கொருவழியாய்" மனம்போனவாறு சென்று கொண்டிருக்கையில், யாவரையும் ஒரு முகமாக்கி முழுச்சக்தியையும் பிரயோகித்து முயற்சி செய்வது சற்றுச் சிரமசாத்தியமானது என்றே கருதப்படுகிறது. அதுவுமன்றி, அபிப்பிராய பேதத்தை வளர்த்து மோதல்களை உண்டு பண்ணும் தேசியப் பிரச்சனைகள் சில தலையெடுத்துக் கருத்து முரண்பாடுகளை மிகுவித்திருக்கும் இத்தருணம் யு. என். பி.யின் முயற்சிக்குக் குந்தகமாக அமைந்துவிடக் கூடும். இவற்றுள் முக்கியமானவை இலங்கை இந்தியர் சிக்கலும், மொழிச் சிக்கலுமே என்பது கூறாமலே விளங்கும். இவற்றை விட மதவிலக்கையும் கூடச் சிலர் தேர்தற் பிரச்சனையாகத் தூக்கிப் போட்டுக்கொண்டு முன்வரலாம். ஆயினும் முதலிரண்டு பிரச்சனைகளும் யு. என். பி. யினிடையிற் போலவே எதிர்க்கட்சியினரிடையும் மாறுபட்ட கருத்துக்களுக்கு இடமளிப்பனவாக இருக்கின்றன.

எதிர்வரும் தேர்தலிலே சுவையான மோதல்களுக்கும் பலப்பரீட்சைக்கும் குறைவிருக்காது என நம்பப்படுகிறது.

### மேயர் பதவி

கொழும்பு மாநகரசபை மேயர் டக்டர் என். எம். பெரேரா அவர்களின் மேயர்பதவி இப்போது மயிரிழையிலே தொங்கிக் கொண்டிருக்கிறது. டக்டர் பெரேரா மேயர் பதவியிலிருந்து விழுத்தப்பட வேண்டுமென்ற தீர்மானம் அடுத்த நகரசபைக் கூட்டத்தில் உறுதிப்படுத்தப்பட்டதும், அவர் மேயர் பதவியை விட்டுவிட வேண்டி நேரும்.

இதற்கிடையிலே அவர் மரியாதையாக விலகற் பத்திரத்தைச் சமர்ப்பிப்பாரோ என எதிர்பார்த்தவர்கள் ஏமாற வேண்டியதுதான். விலகற் பத்திரத்தைச் சமர்ப்பிக்க வேண்டாமென்று அவரது ஆதரவாளர்கள் கருதுகிறார்கள். எனினும் அவர் அகற்றப்படுவார் என்பது நிச்சயமாகி விட்டது.

சில நாட்களுக்கு முன்வரை என்ன செய்வதென்றறியாது, தர்மசங்கடப்பட்டுக்கொண்டிருந்த திரு. மக்கான் மரைக்கார்கூட இப்போது டக்டர் பெரேராவுக்கு எதிராக வாக்களிப்பது என்ற முடிவுக்கு வந்துவிட்டார். திரு. மக்கான் மரைக்கார் யு. என். பி.க்காரராக இருந்த போதிலும், அக்கட்சியின் எதிரியாகிய டக்டர்பெரேராவுக்கு பரிந்து தமது உறுப்பினர் பதவியிலிருந்து விலகிவிடத் தயாராக இருந்தார்.

ஆனாலும் அவரது தொகுதியிலுள்ள வாக்காளர்கள் அப்படிச் செய்யக் கூடாதென்று கட்டளையிட்டு விட்டனர். எனவேதான் அவர் நகரசபையின் உறுப்பினராக இருந்து வருவார்; கட்சிக் கட்டுப்பாட்டைக் காப்பாற்ற டக்டர் என். எம். பெரேராவுக்கு எதிராகவும் வாக்களிப்பார். டக்டர் பெரேராவும் மேயர் பதவியைத் துறந்து விடுவார். யு. என். பி.க்காரர்கள் மேயர் பதவிக்குச் சண்டை போடுவார்கள்.

### சிங்களமுந் தமிழும்

"கையை இறுகப் பொத்திக்கொண்டு, 'உள்ளே வைரம் இருக்கிறது' என்று கூறுகிறார்கள். உள்ளே வை

(தொடர்ச்சி 12ஆம் பக்கம் பார்க்க)



# வாழும் சமுதாயத்துக்கு

## அவர்கள் பேசும் மொழியே உயிர்

## ஈழத்து மக்களுக்கு அடிகளார் செய்தி

✻ ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற கொள்கையை உலகிடை பரப்பிப் பைந்தமிழ் வளர்த்து வரும் குன்றக்குடி அடிகளார் ஈழகேசரி வாயிலாகத் தமிழ் மக்களுக்குப் பின்வரும் சிறப்புச் செய்தியை விடுத்துள்ளார்கள். அதனை மகிழ்வுடன் இங்கு வெளியிடுகின்றோம்.

✻ வாழும் சமுதாயத்துக்கு அவர்கள் பேசும் மொழியே உயிர். ஒரு சமுதாயத்தின் பெருமை, ஆக்கம் எல்லாமே அவர்களுடைய தாய்மொழியைப் பொறுத்ததேயாம். மொழி சிதையுமானால் அதனைச் சார்ந்து நிலவுகின்ற நாகரிகமும் சிதையும். இந்த நிலைமை ஏற்படுகின்றபோது சமுதாயமும் சிதைவுற்று அழிவதற்கான ஏதுக்கள் உண்டாகின்றன.

✻ எனவே தமிழ்மக்கள் தம் தாய்மொழியைத் தக்க முறையிற் பேணிக் காப்பதன் மூலம் தமிழினத்தையே காப்பாற்றிக் கொள்கிறார்கள். அதோடு தம்மைச் சுற்றிச் சூழ்ந்துள்ள பிறமொழிகளையும், அதன் பயனாகப் பைந்தமிழ் மொழியையும் பன்மடங்கு வளப்படுத்திக் கொள்வார்களாக. இங்ஙனம் செய்வதால் தமிழ் உரிமையும் தமிழர் உரிமையும் காப்பாற்றப்படும்.

# மொழிப் பிரிவினை

## சமூகப் பிரிவினையாதல்

## கல்லோயாவிற் பாரபட்சம்

கிழக்குத்தபால் : : ஊரி

மட்டக்களப்பு, 5-10-55

சிங்களம், தமிழ் என்ற மொழிப்பிரிவினை அரசியல்வாதிகளாற் சமூகப் பிரிவினையாக மாறி அமைதியைக் குலைத்துவரும் இந்நாட்களில், அரசாங்கமும் மறைமுகமாக நடத்துகின்ற ஒரு போக்கான கொள்கைகளை மக்கள் இங்கே வருத்தத்துடன் கவனித்து வருகின்றனர். கிழக்கிலங்கையின் வளம்கொழிக்கும் அமுதசுரபி போன்ற கல்லோயாத் திட்டம் இப்பகுதி மக்களுக்கன்றி, வெளியூர்ச் சிங்கள மக்களுக்கே அதிகம் பயனீட்டுவதாக மாறியபோது மக்களடைந்த அரசியல் அச்சம் இன்று உண்மையாகி வருகிறது. குடியேற்றப்பட்ட சிங்களமக்கள் எல்லோரும், தமுடன் வாழும் தமிழ்க் குடியேற்றக்காரரை எதிர்ப்பு மனப்பான்மையோடு நடத்துகின்றார்கள். நல்ல நீர்ப்பாய்ச்சல் வசதிகளுடைய வயலும் எல்லாக் குடியிருப்பு வசதிகளுமமைந்த வீசெளும் தருவோம் என்று உறுதி கூறப்பட்டு இப்பகுதியிலிருந்து கல்லோயாப் பள்ளத்தாக்கின் பல பகுதிகளுக்கும் அழைத்துச் செல்லப்பட்ட சோனக மக்களும், தமிழ் மக்களும், சிங்களரிலும் பார்க்க வேறுபாடான முறையில்நடத்தப்படுகின்றனர்.

வயலுக்கு நீர்ப்பாய்ச்சல் வசதிகள் கொடுக்கப்பட்டில, வெளிச்சம், போக்குவரவு, வைத்தியம், கல்வி முதலான வசதிகள் குறிக்கப்பட்டபடி அவர்களுக்குக் கிடைக்கிறதில்லை. அதி

(தொடர்ச்சி 7 ஆம்பக்கம்பார்க்க)

## குன்றக்குடி அடிகளார்

மட்டக்களப்பு

மட்டக்களப்புத் தமிழ்க்கலை மன்றத்தாரின் அழைப்பை யேற்று அருட்டிரு குன்றக்குடி அடிகளார் இந்த ஒக்டோபர் மாதம் 12, 13ஆந் திகதிகளில் மட்டக்களப்புக்கு வருகை புரிவாரெனத் தெரிகிறது.

தமிழன்பர்கள் வாழும் இடங்கள் எல்லாம் சென்று மகிழ்வூட்டுவது ஈழகேசரியே

## ஆசிரியருக்குக் கடிதம்

# எதிர்க்கட்சி ஒற்றுமை சனநாயக அடிப்படையில் மனமாற்றம் ஏற்பட வேண்டும்

ம. சத்தியமூர்த்தி பி. ஏ.

அரசியல் துறையை இன்று நோக்கின் ஐக்கிய முன்னணிகளின் பேச்சாகவே இருக்கின்றது. வட இலங்கையிலே தமிழர் ஐக்கிய முன்னணி ஒன்றை அமைப்பதற்காகப் பேச்சு வார்த்தைகள் நடைபெறுவதாகப் பத்திரிகைகள்மூலம் அறிகின்றோம். தென்னிலங்கையிலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சிகள் போன்ற பொதுவுடைமைக் கட்சிகளும், ஒரு முன்னணியை அமைப்பதற்கு முயற்சிசெய்து வருவதாக அறிகின்றோம.

பொறுப்பு வாய்ந்த அரசியல் தலைவர்கள் எதிர்க்கட்சியைச் சனநாயக முறையிற் பெலப்படுத்த வேண்டுமெனச் சந்தர்ப்பமேற்பட்ட பொழுதெல்லாம் எடுத்துக் கூறுவதற்குத் தயங்கவில்லை. மேற்கூறிய ஐக்கிய முன்னணிகள் எவ்வளவு தூரம் ஒரு பெலமான, சனநாயக எதிர்க்கட்சியை அமைக்க உதவுமென்ற வினா எழுகின்றது. இன்று ஈழநாட்டிலுள்ள எதிர்க்கட்சிகள் பல்வேறு இலட்சியங்களுக்காக முரண்பாடுள்ள கொள்கைகள் உடையனவாகக் காணப்படுகின்றன. இத்தகைய சூழ்நிலையில், எதிர்க்கட்சிகளிடையே ஒற்றுமையை ஏற்படுத்துவது இலகுவான காரியமல்ல. எதிர்க்கட்சிகளிடையே ஒற்றுமை ஏற்பட வேண்டுமாயின் ஒவ்வொருகட்சியும் தமது கொள்கையிற் சிறிதளவேயேனும் தளர்த்தத் தயாராக இருக்க வேண்டும். கட்சிகளது கொள்கைகளில் மாத்திரமின்றி, கட்சித் தலைவர்களிடையேயும் மன மாற்றம் ஏற்படவேண்டும். அப்பொழுதுதான எதிர்க கட்சிகளின ஒற்றுமை சாத்தியமாகும்.

தமிழர் ஐக்கிய முன்னணி ஒன்று அமைக்கப்படுவதை இலங்கை வாழ் தமிழ்பேசும மக்கள் வரவேற்பார்கள் என்பதில்ஐயமில்லை. தமிழத் தலைவர்கள எல்லோரும் ஒன்றுபட்டால் தமிழ் மக்கள் மட்டற்ற மகிழ்ச்சியடைவார்கள. இம் மகிழ்ச்சியால் நாம முக்கியமான சில விஷயங்களை மறந்துவிடக் கூடாது.

தமிழர் ஐக்கிய முன்னணி ஒரு திட்ட வட்டமான கொள்கையைத் தயாரித்து மக்களுக்குச் சமர்ப்பிக்க வேண்டும். தமிழ்த் தலைவர்கள் ஓர் இலட்சியத்தின் அடிப்படையில் ஒன்றுபட வேண்டும். தேர்தலிலே மாத்திரம் வெற்றி பெறுவது அவர்களது நோக்கமாக இருக்கக் கூடாது. கடந்த காலத்தைப் போல் எமது தலைவர்கள் பதவி வேட்டைகளில் இறங்கிவிடக்கூடாது. மேலும் வகுப்புவாதக் கூச்சலைக் கிளப்பிச் சிங்கள மக்களைத் தமிழ் மக்கள்மீது துவேஷம கொள்ளச் செய்யக்கூடாது.

தமிழ் மக்கள் தமது உரிமைகளுக்காகப் போராடத்தான் வேண்டும். உரிமைகளைப் பெறுவதற்குப் போராட்டம் நடத்தத்தான் வேண்டும். இப் போராட்டத்தை நடத்துவதற்கு ஓர் இயக்கம் வேண்டும். இந்த இயக்கத்தை நடாத்துவதற்குத் தகைமையும் தளரா நம்பிக்கையும் உள்ள தலைவர்கள் வேண்டும். இத் தலைவர்கள் சுயநலத்தைப் பெரிதாகப் பேற்றாது பொது நலத்தைப் பெரிதாகப் போற்றவேண்டும். தமிழர்களது உரிமைகளுக்காகப் போராடும்போது, தமிழ் மக்களது உரிமையைப் பறிப்பதற்கு எத்தனிக்கும் இயக்கங்களைக் கண்டிக்க வேண்டுமேயல்லாது சிங்கள மக்களுக்கு எதிராகப் பிரசாரம் செய்யக் கூடாது.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கூட்டத்திலே தோழர் பீட்டர் கெனமன் பேசும்பொழுது, தமிழ்க் காங்கிரசுக்கும தமிழரசுக் கட்சிக்குமிடையேயுள்ள வேற்றுமைகள், பொதுவுடைமைக் கட்சிக்கும் மற்றைய எதிர்க்கட்சிகளுக்குமிடையேயுள்ள வேற்றுமைகளிலும் பார்க்கப் பெரிது எனக் கூறினார். இக்கூற்றை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. தமிழ்க் காங்கிரசுக்கும, தமிழரசுக்கட்சிக்கும் இப்பொது அதிக வேற்றுமையில்லை. இன்று காணப்படும் ஓரிரண்டு வேற்றுமைகளையும்

(தொடர்ச்சி 3ஆம் பக்கம் பார்க்க)

# இசைக் கலை மன்றம் கலைஞர்களின் முயற்சி

இலங்கை வானொலிக் கலைஞர் திரு. வி. நடேசன் எடுத்துக் கொண்ட பெரு முயற்சி காரணமாய் சென்ற 17–9–55 சனிக்கிழமை 'தென்மராட்சி இசைக்கலை மன்றம்' என்ற பெயரில் ஒரு சங்கம், இசைக் கலைஞர்களின் முயற்சியால் நிறுவப்பட்டது. ட்றீபேக் கல்லூரியில் நடந்த இம் மன்ற அங்குரார்ப்பணக் கூட்டத்துக்குச் சங்கீத பூஷணம் எஸ். விஜுசித்தம்பி தலைமை வகித்து இசைமணி வி. நடேசனின் கலையார்வத்தையும் இசைக்கலை மன்றத்தின் தோற்றம் பற்றியும் பாராட்டிப் பேசினார். திருவாளர்கள் ஆசிரியர் சி. செல்வத்துரை, வி. நடேசன் ஆகியோர் பேசுகையில் மன்றத்தின் நோக்கம், வேலைத்திட்டம் ஆகியவை பற்றி விரிவாக எடுத்துக் கூறியதுடன் கலைஞர்களின தம் கலாரசிகர்களினதும் ஒத்துழைப்பு அத்தியாவசியமானதெனவும் கேட்டுக் கொண்டார்கள். திரு. கே. குமாரசுவாமி, திரு. எஸ். செல்லையா, திரு. எஸ். கந்தையா, திரு. கே. சர்வேசுவரசர்மா, திரு. சே. எாம்பமூர்த்தி ஆகியோரும் கூட்டத்தில் பேசினார்.

சங்க நிர்வாகிகள் தெரிவு பின்னர் நடைபெற்றது. தலைவராக திரு. எஸ். விஜுசித்தம்பியும், உபதலைவர்களாக திரு. சி. செல்வத்துரை, திரு. எஸ். செல்லையா ஆகியோரும், காரியதரிசியாக திரு. வி. நடேசனும், தனாதிகாரியாக திரு. எஸ். கந்தையாவும் தெரிவு செய்யப்பட்டார்கள்.



C.C.C. பண்படுத்தும் புகையிலைப் பசளை

கொழும்பு கொம்மேர்ஷல் கொம்பனி, லிமிட்

தபாற்பெட்டி 33 :: :: கொழும்பு.

C.C.C. பசளை கிடைக்குமிடங்கள்:-

சுன்னாகம் — R.M. கான்பாய் ஸ்ரோர்ஸ்

யாழ்ப்பாணம் — M.S. மணியம் அன்ட் கோ

ஊர்காவற்றுறை — கைற்ஸ் டிஸ்ரிபியூரேர்ஸ்

# கேள்வி மண்டலம்

குள்ளனூர்

குள்ளனுருக்குக் கேள்விகள் எழுதி அனுப்புவோர் தங்கள் பெயரையும் விலாசத்தையும் குறிப்பிடவேண்டும். சொந்தப் பெயர் வெளிவருவதை விரும்பாதவர்கள் புனை பெயர் ஒன்றினைக் குறிப்பிடலாம். ஆனால் கேள்விகளுடன் உண்மைப் பெயரும் விலாசமும் எழுதி அனுப்புதல் வேண்டும். ப—ர்.

கனிபா, முதலாம்தெரு, ஏறவூர்

கேள்வி: பூவில் வண்டுகள் விழுவதேன்?

மறுமொழி: பொதுச் சொத்தை அபரிக்க.

கே. ஒரு நண்பர் நல்லவர் கெட்டவர் என்பதை எவ்வாறு அறியலாம்?

மறு. அவருக்கு எது பிடிக்கும், எது பிடியாதென்பதைத் தெரிந்துகொள்வதன்மூலம்.

சி. பரமசுவாமி, கைதடி

கே. வற்றாத ஊற்றெது?

மறு. தாயின் அன்பு.

முகைதீன், ஏறவூர்

கே. சில அரசாங்க உத்தியோகத்தர் லைலஞ்சம் வாங்குவதேன்?

மறு. கொடுக்கல் வாங்கலால் இருசாராருக்கும் நன்மை கிடைப்பதால்.

பாத்திமா ஏச். உஸ்மான், பியசட்ஸ் லேன், மருதானை

கே. பெண்கள் பத்திரிகைகளுக்குக் கதை, கட்டுரைகள் எழுதக்கூடாதெனச் சிலர் கூறுவதேன்?

மறு. பெண்ணுள்ளத்தை உலகம் அறிந்துவிடும் என்பதற்காக.

அ. அ. மஹ்மூது, 356, மெயின் வீதி, மாத்தளை

கே. மறுபிறப்பு உண்டென்பதைப்பற்றித் தங்கள் கருத்து என்ன?

மறு. காய்க்கும் ஈடேற்றம் உண்டென்பதால் மறுபிறப்பு இருக்கவே இருக்கின்றது.

யூ. எல். ஹனிபா, ஏறவூர்

கே. வாடாத மலர் எது?

மறு. பொன் மலர்.

அ. இராசேந்திரம், மூதூர்

கே. தலதா மாளிகையைத் திருத்துவதற்காக 15 இலட்சம் ரூபாயும், மகியங்கனையைத் திருத்துவதற்காக 5 இலட்சம் ரூபாயும் அரசாங்கம் ஒதுக்கியிருக்கிறது. இதைப்பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?

மறு. பொதுத்தேர்தல் நெருங்கிக்கொண்டிருக்கின்றதென்பதுதான்.

புனிதன், யாழ்ப்பாணம்

கே. சிலர் தம்மை விளம்பரப்படுத்துவதில் ஏன் அதிக அக்கறை காட்டுகின்றனர்?

மறு. சமூகத்தில் இடம் கிடைக்காவிட்டாலும் பத்திரிகைகளிலாயினும் பெயர் அடிபடுமே என்பதற்காகத்தான்.

வாமதேவன், புறக்கோட்டை, கொழும்பு

கே. கிராமத்திலும் நகரத்திலும இப்போது பெருகுவதென்ன?

மறு. அரசியற் சங்கங்கள்.

நா. ரவீந்திரன், ஊர்காவற்றுறை

கே. மனிதன் எப்போது தனது மதியை இழக்கிறான்?

மறு. பெண்மணியின் புத்திமதிக்கு மதிப்புக் கொடுக்கும் போது.

கா. சி, செட்டியார் தெரு, கொழும்பு

கே. தமிழனுக்கு விடிவு எப்போது கிடைக்கும்?

மறு. உலகநீதி போதித்தன்ன வள்ளுவர் தவறினர் என்று விதண்டாவாதம் பேசும் கும்பல் குலையும்போது.

மட்டக்களப்புத் தமிழகப் புலவர் பரம்பரை — 9

# சேகுமதாறுசாகிப் புலவர்

பண்டித, வி. சீ. கந்தையா

மட்டக்களப்பு நகரின் தென்பால் நாற்பது மைல் எல்லையில் உள்ள வளமார்ந்த செழும்பதி அக்கரைப்பற்று. தமிழர், சோனகர், சிங்களர் என்ற ஈழத்தின் முப்பெரும் குழுமக்களும் வேறு வேருன மதத்தவர் பலரும் கலந்து மனவேறுபாடின்றி இவ்வூரில் வாழுகின்றார்கள். கிழக்கே நீண்ட கடலெல்லை சார்ந்த தென்னந்தோட்டங்களும், மேற்கே உள்ள வளவயற்பரப்பும் ஊரை அழகு செய்வன. வேளாண்மை செய்தல் மக்களின் முதன்மையான தொழில். அதனால் ஓய்வு நேரம் நிறையப் பெறுவாராதலினால் அவரிடைக் கலைவளம் பெருகுதற்கும் இயன்ற இடமாக அக்கரைப்பற்று அமைந்துள்ளது.

பெயர் தெரிந்தோரும், தெரியாதோருமாகத் தமிழ்ப் புலவர் பலர் தோன்றுதற்குக் களனுன ஊர் இது. சிறந்த கவிஞரான மொட்டை வேலாப்போடியாரும் அவர் பரம்பரையினரும் இங்குத் தமிழ்க் கவி பரப்பிய வரலாற்றினை முன்னர்க் கண்டோம். தமிழ்ப் பெருங் குடிகளாய் இங்கு வாழும் சோனக மக்களும் புலமையிற் சிறந்தவர்களே என்பதை அன்னாரின் புலவர் பரம்பரைக்குறிப்புக்களைக்கொண்டு நாம் நன்கு காணலாகும். அவர்களது புலவர் வரிசையினை உயர்த்திநிற்கும் ஆற்றல் வாய்ந்த தமிழ்ப் பாவலர் பலர் இவ்வூர் முஸ்லீம்களிடைத் தோன்றியிருக்கின்றனர். இந்தப் பரம்பரையினை அழகுசெய்து 19ஆம் நூற்றாண்டின் இறுதிக் காலத்தில் விளங்கிய பெரும் புலவரே சேகு மதாறு சாகிப் அவர்களாவர்.

கமக்காரனுன மீரான் குட்டியவர்களின் புதல்வன் நமது புலவர் பெருமகன். உறுதியான உடற்கட்டு இல்லாத காரணத்தினால் இளமையிலே தந்தையின் தொழிலை வளர்க்கச் செல்லாது சில்லறை வாணிகத்தில் ஈடுபட்ட சேகு, காலமுதிர்ச்சியின்போது குர் ஆன் முதலான கிதாபு (நூல்) வியாபாரம் நடத்தத் தலைப்பட்டனர். இத் தொழில் கலைவளர்ச்சியிற் தொடர்புகொள்ளுதற்கு இவரை வழிப்படுத்துவதாயிற்று. எனினும் நூற்படிப்பினை இயற்கையன்னை நெடுநாளைக்கு விட்டுவைக்க விரும்பாதவள் போல் கண் பார்வையை, இவரிடமிருந்து நீக்கிவிடலாயினள். அதனாற் பெரிதும் வருந்தி ஆண்டவன்மீது பல வேண்டுதற் செய்யுள்களைப் பாடத் தொடங்கியபோதுதான், இவரது புலமையின் சிறப்பினை மக்கள் அறிந்து போற்றத் தொடங்கினார்கள். கட்புலன் இழந்தமை அருள் வெள்ளம் பொங்கப் பெறுதற்கு ஒரு வாய்ப்பினை இவருக்கு நல்கலாயிற்று என அனைவரும் கருதினர். வாயைத் திறந்தால் பிறப்பன அளவிறந்த இனிய பக்திப் பாடல்களாகவே இருந்தன.

இவரது இத்தகைய பாடல்களை, இறைவன் பேரில் வேண்டுதல், முகையதீன் ஆண்டகை மீது வேண்டுதல் முதலாகப் பல தலைப்புகளில் தொகுத்துப் 'பல பாமாலை' என்ற நூலாக அக்காலம் அச்சேற்றினர்கள். அறுசீர் விருத்தங்களானியன்ற அந் நூல் முற்றும் இன்று கிடைத்திலதெனினும், நோன்புக் காலங்களிற் பள்ளிவாசல்களிலே அதில் உள்ள பாடல்கள் பல எழுதாமறையாகப் பாடப்பெற்று வருகின்றன. முஸ்லீம் மக்களுடைய நாவினது சேகு மதாறு சாகிபுவின் பலபாமாலைச் செய்யுள்களிற் சிலவற்றையாவது மறவாது வைத்திருத்தல் தம் கடமை எனக் கருதும் சிறப்பினை இப் பாடல்கள் பெற்றனவாகும்.

"மாண்ட பிணத்தை
எழுப்பிவிட்டு
மானைப் பிணை நின்
றவிழ்த்து விட்டு
வேண்டு மடியார் பவந்
தீர்த்து
மேன்மை புரிந்த முகுத்
தாறே
ஆண்டோ னெமக்கு விதித்த
மறை
அநில்நா ணடக்கச் செயு
முலக
மூன்று மதித்துப் புகழ்ந்
தேத்து
முகம திறசூல் நயினரே"

என்னும் இச் செய்யுளானது நபிநாயகத்தின் சீரிய அருட் செயல்களையும், மாண்பினையும் நயம்படக் கூறுவது.

ஈரா றுண்டோர்
நிலையினில்நின்
றிறைஞ்சியப் புகழ்ந்தே
யகியபல
மாரா யங்கள்
மிகப்படைத்தீர்
மன்னர் அபுசாலிபுகு
தவப்பேறே
சீரார் பத்தி மாவீன்ற
செல்வக் கனியே
யென்வறுமை
சாரா தகற்றிநும்
மருட்கருணை
தாரும் முகைய தீனொலியே

என்பது முகைய தீனாண்டவர் மீது இவர் மனம் கசிந்து வேண்டுதல் செய்த ஒரு பாடலாகும். "சீரார் பாத்திமாவீன்ற செல்வக் கனியே" என்ற தொடரில் புலவனது உள்ளத்தின் கனிவு புறப்படுவதை நன்கு காணலாகும்.

புலவர் பெருமக்களை அண்டிவாழும் பழந் தெய்வமான வறுமைத் தேவி இன்னாரையும் தவறவிடாது சேர்ந்திருந்தாள். உடலும் நோய் கொண்டது. ஆண்டவனையன்றி இவற்றைப்போக்க வேறு யாரை வரகவிகள் வேண்டுவார்கள்! அதற்கமையப் புலவரது உள்ளம், வறுமையிற் கனிந்து இறைவனுடைய அருள் வெள்ளத்தினை நோக்கி இரங்குவதையும் இச்செய்யுள் காட்டி நிற்கின்றது.

இவையன்றி நாகூர் சாகுல் ஹமீது ஆண்டகைபேரில் இவர் பாடிய ஒருபாஒருபஃது என்னும் நூற்செய்யுள்களின் இறுதியடிகளும் புலவரது வறுமை, பிணி என்பனவற்றின் விலக்கினை வேண்டியனவாய் அமைந்திருப்பதை நாம் அறிதல் கூடும்.

பகரரிய தாய்தந்தை
மனையிலெழி லாகவே
பதினெட்டு வயதுறைந்தீர்
பரிசுதரு குருவுறுகு
வாலிறெனும் நகரினிற்
பத்துவரு டம்தரித்தீர்
அகரமுத லவனருள்
வளர்ந்திடப் பன்னிரண்
டாண்டுதே சந்திரிந்தீர்
அற்புத மிகுத்தநா
கூரதனி லெழுநான்
காண்டுசீ வித்திருந்தீர்
இகபர மதிக்குநபி
ஹிஜிரிதொள் ளாயிரத்
தெழுபத்தி யெட்டாண்டு
மாதம்
இயம்பிடு ஜெமாதுலா
கிறு'தெய்தி ஈரைந்தினில்
வெள்ளி 'ஹஜ்ஜத்
தொகுத்திற்
றகைமைபெறு பொத்தாகி
யருள்வளரு நாகூரு
தறுகாவில் வாழுமரசே
தமியனென் மிடிமைபிணி
போக்கிநல மாக்குவீர்
சாகமீ தெந்தமொலியே"

இச் செய்யுள், சாகமீது ஆண்டகையாரது வாழ்க்கைக் கழிவின் காலப் பகுப்பினையும், நாகூரில் ஒளிவடிவாய் அவர்கள் அமைந்த காலத்தினையும் முஸ்லீம் திகதி அட்டவணைப்படி அழகுறக் குறித்து நிற்பது. இதனிற் றடியினைப் போலவே பாடலெல்லாம் "சாகமீதெந்தமொலியே" என முடித்தல் நூலின் போக்காகும்.

நாகூரடைந்து அத்திருப்பதியின் ஆண்டவனைச் சாகிப் அவர்கள் சரண் பெற்றிருந்த காலத்தில் இந்நூல் எழுந்ததாகும். ஈழத்தோடு மட்டும் நின்றுவிடாது தென்னிந்தியத் தமிழகத்திலும் சென்றிருந்து இன்னார் தமிழ் நலம் தேர்ந்தனரென்பதற்கு இந்த 'ஒருபா ஒருபஃது' என்னும் நூல் சான்றுயுள்ளது. நாகூரில் இருந்த காலத்திற் பல புலவர்களோடு கவிப் போரில் ஈடுபட்டு அவர்களை வென்றனரென்றும், அதனால் ஈழத்து முஸ்லீம்களின் புகழ் பெருக்கிய பெருமகனை இவரை அங்கிருந்த மக்கள் மதித்துப் போற்றினரென்றும் கூறப்படுகின்றது. —தொடரும்


## வெளிவந்துவிட்டது!

## மொழிப்பயிற்சி - 5ஆம் புத்தகம்

6ஆம் வகுப்புக்கு

பள்ளிக்கூட மாணவர்கள் மொழி ஆட்சியில் நிலையான—இலக்கண அறிவுடன் இயைந்த—அறிவை மத்திய வகுப்புக்களிலேயே பெற முடியும். இவ் வறிவு பூரணமடைய, நன்கு ஆராய்ந்து, திட்டப்படி ஒழுங்குசெய்யப்பட்ட மொழிப்பயிற்சி நூல்கள் பேருதவி புரியும்.

மத்திய வகுப்புக்களுக்குரிய மொழிப்பயிற்சி (விளக்க) நூல்கள் சிறந்த முறையில் இதுகாறும் வெளிவரவில்லை. ஆகையால், எமது ஆரம்ப வகுப்புக்களுக்குரிய மொழிப்பயிற்சி (1, 2, 3, 4ஆம்) நூல்களைத் தொடர்ந்து 6, 7, 8ஆம் வகுப்புக்களுக்கு மொழிப் பயிற்சி நூல்கள் தனித்தனி வெளியிட எண்ணியுள்ளோம். அம் முயற்சியின் முதல் வெளியீடாகிய மொழிப்பயிற்சி 5ஆம் புத்தகம் (6ஆம் வகுப்புக்கு)

**15-9-55இல் வெளிவந்துவிட்டது.**

இந்நூல், அண்மையில் அரசினரால் 6ஆம் வகுப்புக்கென வெளியிடப்பட்ட புதிய பாடத் திட்டத்திற்கு இயைய எழுதப்பட்டது.

| விலை விபரம் : | ரூ. ச. |
|---|---|
| * மொழிப்பயிற்சி 1ஆம் புத்தகம் | 60 |
| * ,, 2 ,, ,, | 85 |
| * ,, 3 ,, ,, | 1-00 |
| * ,, 4 ,, ,, | 1-10 |
| ,, 5 ,, ,, | 1-20 |

## வட-இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம்

சுன்னுகம்

*வித்தியா பிரசுர சபையினரால் அங்கீகரிக்கப்பட்டவை.


# எல்லோருக்கும் சமஉரிமை

## சர்வோதயத்தின் தத்துவம்

விநோபா பாவே

பண்டையில் நாடாட்சியை அரசனென்னும் ஒருவனிடம் ஒப்படைத் திருந்தோம். இன்று பெரும்பான்மையோரின் அபிப்பிராயப்படி செல்லும் ஜனநாயகத்தைப் பெற்றிருக்கிறோம். இதுவும் போதாததே. ஜனநாயகம் என்பது அனைவருடைய அபிப்பிராயம் கொண்டதாய் அமைய வேண்டும். ஆகையால் சர்வோதயம் என்னும் ஒரு புதுநோக்கம் மக்கள் முன்பு உள்ளது. இன்றைய ஜனநாயகக் கொள்கைகளினும் மிகுந்து செல்வது சர்வோதயம். அம்முறையில் மத்திய ஆட்சியில் மிகக்குறைந்த அதிகாரமும், அடியிலுள்ள கிராமத்திற்கே எல்லா அதிகாரமும் அமையும்.

இன்று யுத்தமின்மையே சமாதனம், அமைதியென்று கொள்கின்றோம். அமைதியில் பயத்திற்கு இடமில்லை. உலகில் எந்தப்பகுதியும் பிறிதொன்றைக் கண்டு பயப்படாமலும், அதைச் சுரண்டாமலும் இருப்பதே உண்மை அமைதி. இன்றைய சமூகம் பொருளாதார அடிப்படைகளை மாறறிவைக்க உள்ளது சர்வோதயம். இன்றுவரை மக்கள் அன்பைப் பெறவில்லை என்பதல்ல; ஆயினும் இன்று சமுதாயம் அன்பின் அடிப்படையில் நிற்கவில்லை. போட்டி, திரட்டல் எனபதை அவரவர் செய்கின்றார்கள். வியாபாரி பிறரை சுரண்டுகிறான்; எப்பொழுதாவது தானமும் கொடுக்கின்றான். ஆயினும் அவன் வறுமையை ஒழிக்கத் தயாராக இல்லை பணக்காரர்கள் எளியவர்களுடன் ஒன்று பட்டு வாழத் தயாரில்லை. இந்த மாற்றத்தை முழுதும் ஒழித்துவிடச் சர்வோதயம் முற்படுகின்றது. எல்லோருக்கும் சமஉரிமையை நாடுகின்றது சர்வோதயம்.

இவ்வுண்மையை மனிதன் அறிய ஆரம்பித்துவிட்டான். இன்று நடிப்பது நாளை உண்மை வாழ்க்கையாகும். இது நல்லதென்று நாம் இதை ஏற்கின்றோம். அனைவரும் பிறர்க்குச் சமமென்றும் உயர்வும தாழ்வும் இல்லையென்றும் உணர்தல் வேண்டும்.

# எதிர்க்கட்சி ஒற்றுமை

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

போக்கிவிடலாம் என்பதே எமது கருத்து.

உதாரணமாகப் பொதுவுடைமைக்கட்சிக்கும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் வேறுபாடு அதிகமாகவே காணப்படுகின்றது. பொதுவுடைமைக்கட்சி, பொதுவுடைமைக்காகவும், சர்வ தேசியத்திற்காகவும், சிங்கள தமிழ அந்தஸ்திற்காகவும் போராடுவதாகக் கூறப்படுகின்றது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியோவெனில், முதலாளித்துவத்திற்காகவும், சனநாயகத்திற்காகவும், 'தேசியத்திற்காகவும்', புத்த சமயத்திற்காகவும், சிங்களமே தேசிய மொழியாக இருக்கவேண்டுமென்பதற்காகவும் போராடுகின்றது. இப்பொழுதுஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் பொதுவுடைமைக் கட்சிக்குமுள்ள வேறுபாடு நன்கு விளங்கும். ஆகையாற் பொதுவுடைமைக் கட்சிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குமிடையே ஏற்படும் ஐக்கிய முன்னணியிலும் பார்க்கத் தமிழ்க் காங்கிரசுக்கும—தமிழரசுக் கட்சிக்குமிடையே ஏற்படும் ஐக்கிய முன்னணி சிறந்ததாக இருக்கும்.

எதிர்க் கட்சிகளிடையே ஒற்றுமை ஏற்படுவதை நான் வரவேற்கின்றேன். ஆனால், சனநாயகத்தையும், உண்மையான தேசியத்தையும், சமதர்மத்தையும்——அல்லது சர்வோதயத்தையும் அடிப்படையாகக் கொண்டே எதிர்க்கட்சிகளிடையே ஒற்றுமை ஏற்படவேண்டும். இந்த இலட்சியம் நிறைவேற வேண்டுமாயின், எல்லா எதிர்க் கட்சிகளும் ஒழிக்கப்படவேண்டும். புதிதாக ஒரே ஒரு சனநாயகக் கட்சி ஒன்றை அமைக்கவேண்டும்.

தமிழர் ஐக்கிய முன்னணியை ஆதரித்தும், எதிர்க் கட்சிகள் ஒற்றுமையை ஆதரித்தும் இங்கு எழுதுவது முரண்பாடு என்று சிலர் கூறலாம். ஆனால், புதிதாக உருவாகும் அரசியற் கட்சி மேலே குறிப்பிட்ட இலட்சியங்களை அடிப்படையாகக் கொண்டு இயங்குவதோடல்லாமல், தமிழ் பேசும மக்களுடைய சட்ட பூர்வமான உரிமைகளை அரசியல் திட்டத்தில் திட்ட வட்டமாகக் கூறி அதற்கேற்றமுறையில் இந்நாட்டு நிர்வாகத்தை நடாத்துமானல், தமிழர் ஐக்கிய முன்னணி அமைக்க வேண்டியதில்லை. அப்படியானகட்சியில் தமிழ்த் தலைவர்களும் சேர்ந்து ஒத்துழைப்பார்கள். இப்படியானநிலைமை ஏற்பட்டால் வகுப்புவாதம் தாண்டவமாடாது; தேசியம் வளர்ச்சியுறும்; சகல சமயத்தவரும், வகுப்பினரும் ஒரே குடும்பத்தினரைப்போல் —— சகோதரத்துவம், சமத்துவம், சுதந்திரம் ——என்ற தத்துவத்தின்படி வாழ முடியும்.

சிறுகதை

★ விழுந்த முல்லைக் கொடியாளோ சிறிதுகாலம் தன் காதலனின் பாதங்களில் வெயில் உஷ்ணம் படாது காத்தாள். நீரைக் காயவிடாது பருக உதவினள். இந்த உதவிகளுஞ் செய்ய முடியாத பருவத்தில் தானே அவனுக்கு உணவாகி அவனுள் ஐக்கியமாகி வாழ்வின் பயனைத் துய்த்தாள்.

ஆரூரன்

# செவ்வாய் தோஷம்

"செவ்வாய்க்கிழமை" என்ற விறகு எரிந்து கக்கும் அனலில், கொதிக்கும் உலைக்களமாகி விட்ட உள்ளம் அந்த மகளிர் ஆசிரிய பயிற்சிக் கல்லூரி அதிபர் பங்கஜத்தை வதக்கி எடுத்தது. எம். ஏ. பரீட்சை வினுக்கோ, உளநூலில் பி எச். டி. ஆய்வுத்தாள் எழுதும் போதோகூடப் பங்கஜம் இவ்வளவு அயர்ந்து வகையறியாது தவித்தது கிடையாது.

மாகாண வித்தியாதிகாரி கல்லூரி நடைமுறை பற்றியோ, அன்றி ஆசிரிய மாணவிகள் சம்பந்தமாயோ வினவியிருந்தால் அவள் இவ்வளவு தூரம் நிலை குலைந்திருக்க மாட்டாள்.

அவளைப் பம்பரமாட்ட அவர் வினவியது இதுதான்: "நீங்கள் மணஞ் செய்வதில்லை என்ற முடிபுக்கு முன்பே வந்து விட்டீர்கள். பின் எந்தக் கணவனின் ஆயுட் பலத்தை நாடித் தங்கள் செவ்வாய் தோஷ நிவிர்த்திக்கு விடாப்பிடியாக இன்னும் செவ்வாய்க்கிழமை விரதம் அனுஷ்டிக்கிறீர்கள்?"

சுடச் சுட நாலு வார்த்தைகள் கொட்டிவிட உதடுகள் ஒருகணம் துடித்தன. அடுத்த கணம் எல்லாம் அயர்ந்து கூம்பின. இவ்வளவு நாளும் தனக்கே விளங்காதிருந்த புதிர், மலையாய் வளர்ந்து கண்முன் காட்சி தருவதை யுணர்ந்தாள்.

"அப்படியானுல் நான் கன்னியாகவே காலங் கழிப்பேன் என்பது வெறும் ஏமாற்றுத் தானு? என்னையறியாமலே, நான் மணஞ் செய்து கொள்வதில் விருப்புடையவளாயே இருக்கிறேனு?" என்ற வினுக்கள் கணத்திற்குக்கணம்வளர்ந்து பூதாகாரமாகிப் பார்க்குமிடமெல்லாம் பரந்து நீக்கமற வளர்ந்தன. அந்த வினுக்களின் அடியில் எறும்பாய், அணுவாய் மறைந்து ஒன்றுபட்டு விட்டாள் பங்கஜம். தன் நிலை மறந்து, தானற்ற பின்னர் தன் கடமை நினைவிலிருந்து கொண்டிருக்குமா? எழுந்தாள்; உலகமே தன்னை விட்டு விட்டு எங்கோ தொலை தூரத்திற்கு வெகு வேகமாகச் சுழன்றேடுவதாக உணர்ந்தாள். தனனுடன் சம்பாஷித்துக் கொண்டிருந்த வித்தியாதிகாரி கண்ணுக்குத் தெரியாத சிற்றுருவில் தொங்கிச் சுழன்றூர்; தன் முன்பிருந்த மாதிரிப்பாட வகுப்பில் ஆசிரிய மாணவியும் மாணவரும் சிறு எறும்புக் கூட்டமாய்ச் சுழன்றனர்; பின்புறம் கடமையே குறியாய் வீற்றிருந்த ஆசிரிய மாணவிகள் புற்றீசலாக வானவீதியிற் பறந்தனர்.

"த — டார்"

"தண்ணி — தண்ணீர்"

"அம்மா மயக்கமாய் விழுந்துட்டா"

"நெற்றியிலே பலத்த காயம்"

"அம்மாடி ஒரே ரத்தக் களரி"

— 2 —

"இன்னும் நான் இப் பூமியில் தானிருக்கிறேனு?" என்ற வினு உள்ளத்தே முகிழ்க் தெழக் கண்ணை விழித்தாள் மூர்ச்சை தெளிந்த பங்கஜம். கண் திறபட நெற்றி வலித்தது; தடவிப் பார்த்தாள். நடந்தவை படிப் படியாக நினைவுக்கு வந்தன. வெள்ளை வெளேரென்ற அறைச்சுவரும், பக்கத்தே கிடந்த மருந்துப் புட்டிகள் நிறைந்தமேஜையும் தானிருக்கும் இடத்தை ஊர்ஜிதஞ் செய்தன. கண் விழித்திருப்பதைக் கண்ட தாதி விரைந்து வந்தாள். அவள் முகஞ் செந்தாமரையாகப் புன்னகை பூத்தது.

"அம்மா! களைப்பாயிருக்கா? சுடச் சுடக் கோப்பி தருகிறேன், பருகுங்கள்" என்று கூறிப் பருக்கினுள்.

"சகோதரி, நீயும் என் போன்றவள் தானு?" எனவினவித் தன் சுமையைப் பிறர்மீது மேற்றி விட்டுக் கண்களை மூடிக்கொண்டாள் பங்கஜம். திடுக்குற்ற தாதி "தெளிவற்ற நிலையில் ஏதோ புலம்புகிறுள் நோயாளி" என எண்ணிக்கொண்டு அவ்விடம் விட்டகன்றுள். பங்கஜம் தன் வாழ்க்கை ஏடுகளை ஒவ்வொன்றுய்ப் பிரித்தாள். இவ்வித சந்தர்ப்பத்தில் மனிதன் செய்யும் சாதாரண காரியமிதுதானே?

* * *

பங்கஜத்திற்கு வயது பதினுலு; கன்னிப் பெண், அத்தான் கோபாலுடன் இந்தக் கல்லூரியில் 'மெட்ரிக்குலேஷன்' வகுப்பிற் படிக்கிறுள். அத்தானின் பூரிப்பில், பூரண பெருமிதம் முகத்திற் தவழ, நிற்கும் இடமெல்லாம் பொலிவுறுகிறுன். அரட்டையடிப்பதில் அத்தானை மிஞ்சி, அவனைச் சிடுமூஞ்சியாக்கிவிடுவாள். அவனது மகிழ்ச்சி குறையக்குறைய, தொழிலாளி வயிறு காயமுதலாளி களஞ்சியம் நிறைவது போலப் பங்கஜத்தின் பூரிப்பும் அளவு கடக்கும். அவன் முன்னர் தான் அசடாகிவிடுவதில் அவனுக்குப் பெரும் ஆனந்தம், துள்ளித் துளிர்க்கும் தாமரையின் குறும்புகளைச் சூரியன் கண்டு செயலற்றுவிடுவது போல.

அன்றும் அத்தானை வென்று விட்ட வெற்றிப் புன்னகை முகத்தை ஒளி செய்ய இரட்டைப் பின்னல் சோடிப்பொருத்தங்கூற, கண்கள் இரண்டும் எம் சோடிக்கிணை இப் புவியிலுண்டோ என்ற லட்சிய பாவந் தீட்ட, அம்மா கண்களுக்குப் பார்க்கப் பார்க்கத் தெவிட்டாத பெரு விருந்தாகநின்றுள்.

அம்மாவின் முகம் வேதனைக் குறியை ஈன்றது. பங்கஜம் என்றும் தன் தாயின் வதனத்திற் காணுத துயரத்தைக் கண்டு, "ஏனம்மா! அப்படியிருக்கிருய்?" என்று மௌனத்தைக் குலைத்தாள்.

"எல்லாம் உன்னைப்பற்றித் தான்" என நீட்டி ஏதோ பேரிரச்சிக்கு உள்ளாக்க முயன்றுள் பங்கஜத்தை.

"எனக் கென்ன? நான் படிப்பதில்லையா? பாடத் தெரியாதா? அங்கவீனம் ஏதாவது தோன்றிவிட்டதா?" என்று படபடப்புடன் அதிகாரத் தொனியில், ஆனுல் அன்புடன், முணுமுணுத்தாள், பங்கஜம்.

"அதெல்லாம் ஆர் கேட்டதம்மா? இன்று சாத்திரியார் வந்திருந்தார். உன் சாதகத்தைப் பார்த்தார். அவர் உன்னைச் செவ்வாய்க் கிழமை விரதமிருக்க வேண்டும் என்று சொன்னுர்."

"எதற்கம்மா! செவ்வாய்க் கிழமை விரதம்?"

"செவ்வாய் தோஷத்திற்கு"

"செவ்வாய் தோஷமென்றுல்?"

"நீ பிறக்கும்போது செவ்வாய் தோஷத்துடன் பிறந்தாயாம். அதை நிவிர்த்தி செய்துகொள்ளக் காலந்தோறும் செவ்வாய்க்கிழமை விரதமனுஷ்டிக்க வேண்டுமென்று வழமையிருக்கம்மா' அதுதான் சொல்லிவிட்டுப் போனுர்"

"இல்லா விட்டால்......" சொல்லி முடிக்கு முன்பே பங்கஜத்தின் வாயைத் தன் கைகளாற் பொத்திக் கொண்டாள் அம்மா, "இப்படியெல்லாம் பேசாதே! என்று எத்தனை நாட் சொல்வது" என்று கண்டிக்க வேறு தொடங்கிவிட்டாள்.

"சரியம்மா நான் இனிமேற் சொல்லவேயில்லை. செவ்வாய் தோஷம் என்னதான் செய்யும் என்பதையாவது சொல்லேன்."

"செவ்வாய் தோஷமுடைய பெண்களால் கணவரின் ஆயுள் குறைந்துவிடும் என்று சாத்திரியார் சொல்லுகிறுர், அம்மா". கண்கள் கலங்கி நீரைக் கக்க முந்தானைத் தலைப்பால் கண்ணை மூடிக்கொண்டு விசித்தாள்.

"கணவரின் ஆயுளைக்குறைப்பவரில் நானுமொருத்தி"

"அத்தான் கோபாலின் ஆயுளைக் குறைப்பவள் நான்"

"அத்தான் நான் உன் ஆயுளைக் குறைப்பவள்"

உள்ளத்தில் மூட்டிவிட்ட தீ பொசுக்கிச் சுட்டது. கட்டிலிற் புரண்டாள்.

தெளிந்த மயக்கம் மீண்டது.

— 3 —

கண்விழிக்க முடியவில்லை. காதில் ஏதோ சம்பாஷணை விழுகிறது. வீட்டிலே உள்ளறையில் படுத்திருக்கிறுள் பங்கஜம். அடுத்த அறையில் அம்மாவும் அப்பாவும் குடும்ப விவகாரந்தான் பேசுகின்றனர்.

"கோபால் உத்தியோகம் பார்க்கும் கந்தோரில் தலைமை இலிகிதராம், பெண்ணின் தகப்பன் பதினுயிரம் ரூபாய் காசாக எண்ணிக் கொடுக்கிறுனும் சீதனம். அதை விட்டுப் பங்கஜத்தை நாடி வருவானு அவன்?"

"என்றுலும் இவ்வளவு நாளும் ஒன்றுய்ப் பழகினவன்; உறவு முறை வேறு. இவளின் சுட்டித்தனம், அழகு, திறன் எல்லாம் தெரிந்தவன்".

"சும்மா சப்புக் கொட்டாதே. அவன் இப்பொழுது உன் மருமகன் கோபால் அல்ல. பெரிய தபாற்கந்தோர் இலிகிதர் அவன்."

"அப்ப அவன் என் அண்ணன் மகனல்ல."

"அண்ணனும் அண்ணன்; அவன் காசைக் கண்டுவாயைப் பிளந்துநிற்கிறுன். இவன் அண்ணு தாசியாகாத குறை."

"ஏன், பொரிந்து தள்ளுகிறீர்கள்? நான் போய் அண்ணனை ஒருமுறை பார்த்து வருகிறேன்."

"அண்ணன்வைத்திருந்த கடைசிஅணுக்குண்டையுங்கூட என்மேலே போட்டுவிட்டான். இனி நீ போய் அவனைச் சோதனை பண்ணப் புறப்படாதே. உன்னையே விழுங்கி ஏப்பம் விட்டிடுவான், வேறே இனி அவனிடம் ஆயுதம் கிடையாது."

அந்த அணுக்குண்டையும் தான் சொல்லிவிடுங்களேன்?"

"உன் மகளுக்குச் செவ்வாய் தோஷமாம்; செவ்வாய் தோஷம் தன் மகனைக் கொண்டுபோய் விடுமாம் பரலோகம். விளங்கியதோ அண்ணுதாசிக்கு?"

"இதெல்லாம் யார் சொன்னதாம் அவருக்கு? பங்கஜத்திற்குச் சாதகமிருப்பதுகூடத் தெரியாதே எவருக்கும்."

முட்டாள் ஜன்மமே இதெல்லாஞ் சொல்லியா தெரிய வேண்டும்? நீதானே அவளைச் செவ்வாய்க்கிழமை விரதம் அனுஷ்டிக்கத் தூண்டிக்கெடுத்தது? என் ஆத்திரத்தைத் தூண்டாதே, தூங்கு.'

"தூக்கம் இனிமேற் சுடலையிலேதான்" முனகலாய் வெளிவந்தது. எவருக்கும் மூச்சுவிடும் விருப்பங்கூட இருந்ததாய்த் தெரியவில்லை.

அம்மா சொன்ன சொல் தவருது மிக விரைவில் சுடலையிற் தூங்கிக்கொண்டாள். அப்பாவும் பின்தொடர்ந்தார்.

பங்கஜம்......

பங்கஜத்தின் கனவுலக வாழ்வுகள் மறைந்தன: நிஜ உலகில் தன்னந்தனியே உயிரைக் கையிற் பிடித்து, கற்பைக் கருத்திற் பிடித்து, உலகைக் கிளம்பினுள். இருந்த நிலபுலன் சொத்துக்கள் அனைத்தையும் செலவிட்டு ஒரு பட்டதாரியானுள். ஆசிரியத் தொழிலிலமர்ந்து மேலும் முயன்று உயர் பட்டங்கள் பதவிகள் பெற்று ஒரே இலட்சியத்தில் மூழ்கி, ஆசிரிய கல்லூரி அதிபர் ஆனுள்..

— 4 —

"எனக்கேன் மயக்கம் வந்தது."?

பழைய மாகாண வித்தியாதிகாரி வேலையிலிருந்து ஓய்வு பெறப் புதிதாக ஞானமூர்த்தி என்பவர் பதவிக்கு வந்தார். பிரிபவரின் மெச்சற் பாக்களும், வருபவரின் புகழ் உரையாடல்களும் அடங்கி ஓய்ந்தன.

அன்று ஆசிரிய மாணவிகளின் படிப்பித்தல் தரம் பார்ப்பதற்கென வந்திருந்தார். வந்தவர் புதுவேலையிலும் ஈடுபடத் தொடங்கிவிட்டார். 'பிறருக்கு எது இன்பம்' என்பதைத் தமது வாழ்க்கையிலிருந்தே தெரிந்தெடுத்துக் கொண்டு அதையே 'பிரந்தரத்துவம்' என்று கொண்டாடும் 'பெரிய மனிதர் குழாத்தின் தலைவர் ஞானமூர்த்தி.

பங்கஜம் மேற்படிப்புப் படித்த காரணத்தாலும், செவ்வாய் தோஷத்தாலும் தான் மணஞ்செய்துகொள்ள வரன் கிடைக்காது கன்னியாகக் காலம் கழிக்கிறுள் என்று தான் சேகரித்துக் கொண்ட செய்திகளைக்கொண்டு தீர்மானித்துக்கொண்டார். அனுதாபம் ஒரு மூலையில் இருந்தது.

(தொடர்ச்சி 10ஆம் பக்கம் பார்க்க)



லண்டனுக்கும் நியூயோர்க் நகருக்குமுள்ள தூரம் 6,916 மைல். இரு பிரிட்டிஷ் விமானிகள் ஜெட் விமான மூலம் இத் தூரத்தை 14மணி, 21நிமிடம் 45·4 செக்கனிற் பிரயாணம் செய்து முடித்தனர்.

'சாமுவேல்'ஸைக் கலந்தாலோசியுங்கள்

❊ நீரிறைக்கும் குழாய்கள் நிறுவுவதற்கு
❊ குழாய்நீர் வசதியமைத்தற்கு
❊ நீர் வடிகால்கள் உதவி அமைத்துக் கொடுப்பதற்கு
❊ சகல விதமான திருத்தங்கள் செய்து புதுப்பிப்பதற்கு.

மனுச்செய்வோருக்கு, விலைத் தரிப்புகள் இனமாக வழங்கப்படும்.

சாமுவேல், சன்ஸ் அன்ட் கோ லிமிடெட்
ஆஸ்பத்திரி ரோட்டு, :: யாழ்ப்பாணம்

தலைமைக் காரியாலயம்:
371, பழைய சோனகதெரு,
கொழும்பு.

பேசுந்தந்தி: 62
தந்தி: ECHIRON

[A197-iv]

சர்வோதய மகாநாடு மூன்றுநாள் சிறப்பாக நடந்து முடிந்துவிட்டதே-யென்று காந்தீயவாதிகள் ஆறுதல் கொள்ள முடியாது. இனித்தான் அவர்களுக்குப் பொறுப்புமிக்க வேலை.

# பண்ணுகம் கண்ட மகாநாடு

## ஆதாரக் கல்வியும் காணி நிலமும்

நமது நிருபர்

சுதந்திர பாரதத்தின் எழுச்சிக்கு ஆக்க சக்தியை ஊட்டி வரும் சர்வோதயக் கருத்துக்கள் ஈழத்திலும் பரம்பி வருகின்றன. இதைச் சென்றவாரம் பண்ணுகத்தில் நடைபெற்ற சர்வோதய மகாநாடானது மிகவும் தெளிவாக எடுத்துக் காட்டியது. அகில இலங்கைக் காந்திய சேவா சங்கத்தினால் நடத்தப்பட்ட இந்த மாநாட்டிற் காந்திய தத்துவங்களைப் பொதுமக்கள் நன்கு தெரிந்து கொள்ளப் போதிய சந்தர்ப்பமேற்பட்டதென்றே சொல்லலாம்.

மகாநாட்டின் முதல்நாள் நிகழ்ச்சிகள் சங்கத் தலைவர் திரு. எஸ். ஏச். பேரின்பநாயகன் அவர்களின் தலைமையுரை, திருப்பெருந்திரு குன்றக்குடியடிகளின் ஆரம்பவுரை ஆகியவற்றுடனும், கலா நிகழ்ச்சிகளுடனும் முடிவடைந்தன.

### நிலச்சிக்கல்

இலங்கையின் எந்தப் பக்கத்தை நோக்கினும் காணி நிலமில்லாத் திண்டாட்டமும் விவசாயச் சிக்கலும் இன்று முக்கியம்பெற்றிருப்பதைக் காணலாம். அதிலும் வானம் பார்த்த பூமியாகிய யாழ்ப்பாணத்தில் நிலச்சிக்கல் பெரும் புரட்சியாகக்கூட மாறிவிடுமோ என்று எண்ணக்கூடிய இச்சந்தர்ப்பத்திற் சர்வோதய மகாநாட்டில் 'நிலச்சிக்கலும் விவசாயமும்' என்பதுபற்றி முதலிற் கவனம்செலுத்தி விவாதித்தது மிகமிகப் பொருத்தமானதேயாகும். இரண்டாம் நாள் சனிக்கிழமை (1-10-55) காலை மேற் குறிப்பிட்ட பொருள் குறித்து ஆசிரியர் திரு. பொ. நவரத்தினம் தலைமையிற் பண்டிதர் மூ. செல்லையா, வலிகிழக்குக் காரியாதிகாரி திரு. எஸ். சுப்பிரமணியம், திரு. சோ. க. தம்பிப்பிள்ளை, ஜனாப் எம். பி. எம். முகம்மது காசிம், தாய்நாட்டிலிருந்து குன்றக்குடி அடிகளாருடன் இங்கு வந்திருந்த வழக்கறிஞர் எஸ். மெய்யப்பன் ஆகியோர் தத்தம் கருத்துக்களை எடுத்துரைத்தார்கள். யாழ்ப்பாணத்தில் இச்சிக்கலிற் பெரிதும் அகப்பட்டுத் தவிப்பவர்கள் ஹரிஜனர்கள்தாம் என்பதை உருக்கமாய் எடுத்துரைத்த பண்டிதர் மூ. செல்லையா அதனை நீக்கக் காந்திய சேவாசங்கம் உடனடியாக முன்வரவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

### மகாவலிகங்கை

மகாவலிகங்கையை வடபகுதிக்குக் கொண்டுவருவதா என்று வியப்புடன் கேட்பதைப் பார்க்கும்போது அது கங்கையைப் பூவுலகுக்குக் கொண்டுவரப் பகீரதன் பட்ட சிரமத்திலும் அதிகமாயிருக்குமோ என்று எண்ணுபவர்களுமுண்டு. ஆனல், அரசாங்க நீர்ப்பாசனப் பொறிவலாளர் இவைப்பாறிய திரு. எஸ். தையல்பாகர் மகாவலிகங்கையை வடக்குப்பக்கமாகத் திருப்பிக் காட்டிய போது இவ்வளவுதானு சிரமம் என்று சொல்லத்தோன்றியது. அவர் ஆதாரமான படங்களுடன் அது ஒரு இலகுவான வேலையென்பதைத் தெளிவுபடுத்திக் காட்டினுர் இது சம்பந்தமாக யாழ்ப்பாணம் நகரசபை சென்ற மாதாந்தக் கூட்டத்தில் நிறைவேற்றிய தீர்மானத்தையும் அதனை ஆதரித்து 'ஈழகேசரி'யில் வெளியான ஆணித்தரமான கருத்துக்களையும் வாசகர்கள் மறந்திருக்கமாட்டார்கள்.

### ஆதாரக் கல்வி

நில விவசாயச் சிக்கலுக்கடுத்தபடியாக அன்று பிற்பகல் அங்கு விவாதத்துக்கெடுத்துக் கொள்ளப்பட்ட விஷயம் "ஆதாரக் கல்வி - ஆத்மீக கலாச்சாரம்" என்பதாகும். ஆதாரக் கல்விக்கும் ஆத்மீக கலாச்சாரத்துக்குமிடையிலுள்ள தொடர்பைக் குன்றக்குடி அடிகளார் தமது தலைமையுரையில் விளக்கமாக எடுத்துக் கூறினுர்கள். "ஆதாரக்கல்வியின் பலன் குறித்து நமக்குள்ள ஐயப்பாடு இருக்க இடமில்லை. அக் கல்வி வளரக்கூடிய சூழ்நிலையையும் சந்தர்ப்பத்தையும் சமூகம் கொடுக்கத் தயாரா என்று அடிகளார் விடுத்த கேள்வி அதிற் கரிசனையுடைய ஒவ்வொருவரும் தம்மைத்தாமே கேட்டு விடை காணவேண்டிய ஒன்றாகும். திருவாளர்கள் ஆ. மார்க்கண்டன், அ. சடாட்சரம், கலைப் புலவர் க. நவரத்தினம், பண்டிதர் செ. துரைசிங்கம் ஆகியோர் இவ் விவாத அரங்கில் கலந்துகொண்டனர்.

அன்று மாலை நடைபெற்ற பகிரங்கக் கூட்டத்திற்குத் திருப்பெருந்திரு குன்றக்குடி அடிகளார் தலைமைவகித்து ஆதாரக் கல்வி சர்வோதயம் ஆகியவை குறித்துப் பேசினுர்கள். ஆதாரக் கல்வியைப்பற்றியும் மேல்நாட்டு நாகரீகத்தின் தாக்கம் சம்பந்தமாயும் அடிகளார் ஆணித்தரமாக எடுத்துரைக்க வேண்டிய சந்தர்ப்பத்தை அன்றைய பிற்பகல் மகாநாடு ஏற்படுத்தியிருந்தது.

முன்னுள் கல்விப்பகுதி உதவியமைச்சர் திரு. க. கனகரத்தினம் ஆற்றிய ஆதாரக் கல்வி சம்பந்தமான விரிவுரை குறிப்பிடத்தக்கது. அவர்கள் தம் அனுபவத்திற் கண்டதையும் கேட்டதையும் வைத்துக் கொண்டு ஆதாரக்கல்வித் திட்டத்தினுல்தான் இலங்கையின் கல்வித்துறையை வளம்படுத்த முடியுமெனக் கூறினுர். பகிரங்கக் கூட்டத்திற் புலவர் நா. சிவபாதசுந்தரனும் பேசினுர்.

### தேர்தலும் மதுவும்

மூன்றும்நாட் காலை மகாநாடு உணவுற்பத்தி அதிபர் திரு. நா. மாணிக்க இடைக்காடர் தலைமையில் நடைபெற்றது. பணம் பொருள்களைப் பாதுகாப்பது பற்றிக் குறித்தும் கிராமக் கைத்தொழில் அபிவிருத்தி சம்பந்தமாயும் மாகாண அதிபர் திரு. ம. ஸ்ரீகந்தா, பண்டிதர் அ. ஆறுமுகம், திரு. பொ. கந்தையா ஆகியோர் பேசினர். இனியொரு யுத்தம் வந்தால் நாம் பணம் பொருளை ஒரு நேர உணவாகக் கொள்ள வேண்டியேற்படும் எனத் திரு. ஸ்ரீகந்தா அவர்கள் கூறியது குறிப்பிடத்தக்கதொன்று.

தேர்தற் போட்டிகளில் வெற்றியடைவதற்குப் பிரசாரபலன்மட்டும் போதுமென்று நம்பியிருப்பவர்கள் சமயாசமயங்களில் ஏமாந்துபோவது அடிக்கடி நடைபெறும் ஒரு சம்பவமாகும். வாக்குப் பலத்தைத் திரட்ட மதுவின் பலத்தைத் தேடிக்கொள்ள வேண்டுமென்ற ஒரு தேர்தற் காலப் பேருண்மையை திரு. எஸ். ஏச். பேரின்பநாயகன் அன்று பிற்பகல் மகாநாட்டுத் தலைமையுரையில் எடுத்துரைத்தார். அடுத்த பொதுத் தேர்தலில் வாகைக்கினைப்ப முயல்பவர்களுக்கு இந்த உண்மை பெரிதும் பிரயோசனப்படக்கூடுமல்லவா?

மது ஒழிப்பும் மாதர் இயக்கமும் என்பதுபற்றி நடந்த விவாத அரங்கில் செல்வி நா. பாக்கியம், வித்துவான் பொன். அ. கனகசபை வழக்கறிஞர், திரு. அ. அருளம்பலம் ஆகியோர் கலந்துகொண்டார்கள்.

அன்றுமாலை நடந்த பகிரங்கக் கூட்டத்தில் திருப்பெருந்திரு. குன்றக்குடி அடிகளார் நிகழ்த்திய தலைமையுரையானது பல்வேறு அம்சங்களையும் தன்னுள் அடக்கியதாக இருந்தது. சட்டத்தின்மூலம் சமூகத்தைத் திருத்தலாமா என்ற கேள்வியை எழுப்பிக்கொண்டு இரசமான கருத்துக்களைத் தெரிவித்தார்கள். அடிகளாரின் அரிய விரிவுரை இவ்விதழில் வெளியாகியுள்ளது.

பண்டிதை சத்தியதேவி துரைசிங்கம், திரு. ஆ. மார்க்கண்டன் பி. ஏ., பி. எஸ்ஸி. வழக்கறிஞர், எஸ். மெய்யப்பன் ஆகியோரும் அங்கு விரிவுரைகள் ஆற்றினர். போயிட்டிவாசியான திரு. க. வைத்திலிங்கம் பூதான இயக்கத்துக்கு 10 பரப்பு காணி நிலம் அளிக்க முன்வந்திருக்கிறர் என்ற செய்தியை அடிகளார் அங்கு வெளியிட்டார்கள்.

### பண்ணுகம் வாழ்க!

மகாநாட்டோடு சம்பந்தப்பட்ட அனைவருக்கும் நன்றிகூறும் பொறுப்பை திரு. சி. க. வேலாயுதபிள்ளை சிறப்புறச் செய்துமுடித்தார். மகாநாடு சம்பந்தமாக உழைத்து வெற்றிகண்ட பண்ணுகம் சர்வோதய அன்பர்களையும் காந்திய பக்தர்கள் இலகுவில் மறக்க முடியாது. அதிலும் முக்கியமாக நிர்வாகப் பொறுப்புக்களைத் தம் தலைமேல் வைத்துச் சுமந்தவர்களில் ஒருவராகிய ஆசிரியர் திரு. கந்தர் சிறப்பான நன்றிக்குரியவராவார்.

மகாநாட்டிற் காட்டப்பட்ட நேருஜியின் ருஷிய யாத்திரை பற்றிய சினிமாப் படத்தைப் பார்க்கப் பொதுமக்கள் திரண்டிருந்தார்கள். ஆனல் படம் தெளிவாகத் தெரிய மறுத்துவிட்டது. அதற்குக் காரணம் ருஷியாவுக்குரியதெனக் கருதப்படும் இரும்புத்திரையல்ல! படம் காட்டும் இயந்திரத்தின் சக்திக்குறைவினுற் காட்டப்பட்ட புகைத் திரையேயாகும்.

மூன்று நாள் மகாநாடு சிறப்பாக நடந்துமுடிந்துவிட்டதேயென்று காந்தியவாதிகள் ஆறுதல்கொள்ளமுடியாது. இனித்தான் அவர்களுக்குப் பொறுப்புமிக்க வேலை அதிகமுண்டு. ஏனெனில் காந்திய தத்துவம் சர்வோதயம் வெறும் போதனையோடுமட்டும் நின்றுவிடுவதல்ல. சாதனைமூலம்தான் அவை பலனளிக்க முடியுமென்பதை எவரும் ஆட்சேபிக்கமாட்டார்கள். அவ்விதம் ஆட்சேபிப்பவர்கள் யாராவது இருப்பின் அவர்கள் விளம்பரத்தில் மட்டும் நம்பிக்கையுடையவர்களாகவே இருப்பார்கள்.

இன்பமே சூழ்க!
எல்லோரும் வாழ்க!

## நிறைவேறிய தீர்மானங்கள்

பண்ணுகத்தில் நடைபெற்ற இரண்டாவது சர்வோதய மகாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்களின் சுருக்கம் வருமாறு:-

1. ஹரிசனங்களுக்கு அரசாங்க குடியேற்றத் திட்டங்களில் விசேட சலுகைகள் காட்டப்படவேண்டும்.

2. யாழ்ப்பாணத்தின் விவசாய விருத்தியை உத்தேசித்து மகாவலிகங்கையை வடக்கே திருப்பவேண்டியது அவசியமாகும்.

3. இலங்கை அரசாங்கம் குடிசைக் கைத்தொழில் என்ற பெயரைக் கிராமக் கைத்தொழில் என மாற்றவேண்டும்.

4. பணநோட்டு, முத்திரை ஆகியவற்றில் பனையின் படமும் பொறிக்கப்படவேண்டும்.

5. பனைவெல்ல உற்பத்தி சம்பந்தமான விவகாரங்களை உணவுற்பத்தி அலுவலகத்துக்கு மாற்றவேண்டும்.

6. யாழ்ப்பாணத்திற் பனம்பொருள் ஆராய்ச்சி நிலையமொன்றை அரசாங்கம் அமைப்பது அவசியமாகும்.

7. இலங்கையிற் பூரண மதுவிலக்கு ஏற்பாடாகவேண்டும்.

8. மதுவிலக்கு வாக்கெடுப்பில் பெண்களுக்கும் வாக்குரிமை யளிக்கவேண்டும்.

அருட்பா பெற்ற திருப்பதியாம் திருகோணமலைக்குக் குன்றக்குடி அடிகளார் 8-10-55இல் எழுந்தருளிய ஞான்று, திருகோணமலைத் திருவள்ளுவர் கழகத்தினர் அண்ணுக்குப் பாடியளித்த வாழ்த்துப்பாக்களுட் சில :

## அருள் பொழியுந் தவப்பெருங் குன்று!

அருளும் ஞான சம்பந்தன அருட்பா பெற்ற திருப்பதியாம்
பொருளும் வளமும் தமிழுணர்வும் பொலியுங் கோணை நகர்விளங்கும்
திருவள்ளுவன்சொல் கொண்டொழுகும் தெய்வக் கழகம் அழைத்திடவந்(து)
அருளும் குன்றக் குடியரசே! அண்ணல்! வாழ்க! வாழ்கவே.

கல்லுங் கனிய வாய்திறந்து கடுஞ்சொல் நெடுஞ்சொல் கலவாது
சொலலுங் கலையில் வல்லவர்கள் 'பெருஞ்சொற் கொண்டால் வருக' என
வெல்லும் மொழியால் வரவேற்கும் விருந்தே! குன்றக் குடியரசே!
அல்லும் பகலும் உழைத்தயரா அன்பே! வாழ்க! வாழ்கவே.

பாரில் ஒவ்வோர் மொழிதனுக்கும் ஒவ்வோர் பண்பு சிறப்பாகத்
தேரின் உண்டென் றுய்ந்துணர்ந்தோர் செப்பக் கேட்டும் பத்திக்கே
நேரில் மொழியாம் தமிழ்மொழியில் நிகழ்த்தும் வழிபாட் டினைமறுப்போர்
தேரும் வண்ணம் மயக்கறுக்கும் தெளிவே! வாழ்க! வாழ்கவே.

காவி யுடையின் கருத்தழகும், கவினும் வெண்ணீற் றொளியழகும்,
நாவில் தவழும் சொல்லழகும், நவிலுந் தமிழின் நடையழகும்,
பூவின் பெருமை தனையுணர்த்தும் பிரமச் சரிய வாழ்வழகும்
மேவிக் குன்றக் குடியரசாய் விளங்குந் தவமே! வாழ்கவே.

## பொதுத் தேர்தல்

### அதைச் சமாளிக்கத் தயார்

நமது நிருபர்

கொழும்பு

அடுத்த பொதுத் தேர்தலுக்கான நடவடிக்கைகள் யாவும் அரசாங்கத்தால் மிகத் துரிதமாக மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. சமீப தினங்களாக உள்நாட்டு அமைச்சர்பகுதியும் மற்றும் பல அலுவலகங்களும் தேர்தல் வேலைகளில் மும்முரமாக ஈடுபட்டிருக்கின்றன. இருப்பினும் பொதுத் தேர்தல் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகள் யாவும் மிக இரகசியமாகவே வைக்கப்பட்டுள்ளன. எதிர்க்கட்சிகள் சற்றும் எதிர்பாராதவகையில் தேர்தல்பற்றிய திடீர் அறிவித்தலை வெளியிடவேண்டுமென்பதே அரசாங்க தலைமைப்பீடத்தின் நோக்கமாகும். ஆனல் எதிர்க் கட்சிகளில் எவையாவது இந் விஷயத்திற் பராமுகமாக இருப்பதாகச் சொல்வதற்கில்லை.

எச்சமயத்திற் பொதுத் தேர்தல் நடைபெற்றாலும் அதனைச் சமாளிப்பதற்குத் தயாராயிருக்கவேண்டுமெனவும் சம்பந்தப்பட்ட அமைச்சர் காரியாலயம் மாகாண அதிபர்களுக்கும் ஏனைய அதிகாரிகளுக்கும் தெரிவித்துவிட்டதாம். சில அதிகாரிகளைப் பூரணமாகப் பயன்படுத்துவதற்கு யூ. என். பி. திட்டமிட்டிருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

யூ. என். பி. பிரசார இயந்திரத்தை நாட்டுப்புறங்களில் கிராமாபிவிருத்தி இயக்கத்தின் மூலம் பூரணமாக இயங்கச் செய்வதற்கான ஏற்பாடுகள் நடைபெறுவதாகவும் வழக்கத்திலும்பார்க்க இவ்வருடம் ஒவ்வொரு மாகாணத்துக்கும் கிராமாபிவிருத்தி மானியம் பலமடங்கு அதிகரிக்கப்பட்டிருப்பதற்குக் காரணம் இதுவேயென்றும் அறியப்படுகிறது. இது விஷயத்தில் வடமாகாணத்துக்கு இம்முறை தாராள மனப்பான்மை காட்டப்பட்டிருக்கிறதாம்.


## தேவை

தலவாக்கொல்லை வட்டாரப் பாடசாலைகட்கு ஆங்காங்கு சென்று கருநாடக சங்கீதம், நடனம், கும்மி, கோலாட்டம் முதலியன பயிற்றக்கூடிய ஓர் இந்து ஆண் ஆசிரியர் தேவை சம்பளம் மாதம் ரூபா 75 தொடக்கம் ரூபா 100 வரையும் போக்குவரவுச் செலவும். J. S. C. அல்லது S. S. C. தராதரம் பெற்றவர்க்கு விசேட சலுகை அளிக்கப்படும். 15-10-55க்குள் தமிழ் ஆசிரிய சங்கக் காரியதரிசி திரு. R. தில்லையம்பலம், Glenomora Estate தலவாக்கொல்லை என்னும் விலாசத்துக்கு நற்சாட்சிப் பத்திரங்களின் கொப்பிகளுடன் மனுப்பண்ணவும்.

[A 223-ii]

ஈழகேசரி

சுன்னுகம் மன்மத புரட். உரு
— கலித் ஆண்டு 86 —
பேரூர்தலில் இல. 835

## இருளில் ஒளி !

'மனம் உண்டேல் இடமுண்டு' என்பார்கள், எந்தக் காரியத்தையும் நல்லெண்ணத் துடன் நிறைவேற்றிவைக்க முற்பட்டால் அதில் தடையேற்படப் போவதில்லை. ஒருவேளை தாமதமேற்படக் கூடும். ஆனால், ஈற்றில் நன்மை விளைப்பதாகவே அமையும். இலங்கை இந்தியர் குடியுரிமைச் சிக்கலை நீக்கிவைப்பதற்கு இலங்கை அரசாங்கமும் இந்திய அரசாங்கமும் ஒப்பந்தம் செய்துகொண்டன. இந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றி வைப்பதில் இலங்கை அரசாங்கம் முற்பட்டிருப்பது உண்மையேயாயினும் அதனை நல்ல முறையில் தீர்த்துவைக்கும் ஆர்வம் சிறிதளவேனும் காண்பதற்கில்லை ஆர்வத்துக்குப் பதிலாகத் தடைகளை ஏற்படுத்திப் புத்தம் புதிய சிக்கல்களை உண்டாக்கி இந்திய அரசினரின் பொறுமையைச் சோதிக்குமளவுக்கு இலங்கையரசாங்கம் நடந்து வருகின்றது.

உண்மையாகவே இந்த ஒப்பந்தம் முதலமைச்சர் நேருஜிக்கு மிகுந்த தலையிடியை யுண்டாக்கிவருவதுடன் இலங்கை யரசினருக்குங் காரசாரமான ஒரு கடிதத்தையும் எழுதச் செய்துள்ளது. இக்கடிதங் கிடைத்து ஆறுவாரகாலத்துக்கு மேலாகிவிட்டது. அப்படியிருந்தும் சென்ற வாரந்தான் இலங்கை அரசினரின் ஆலோசனைக்குழுவினர் முதல்முறையாக முதலமைச்சர் நேருஜியின் கடிதத்தைப் பரிசீலனை செய்துள்ளனராம்.

இதற்கிடையில் இலங்கை இந்தியர் ஒப்பந்தத்தை நீக்கிவிட வேண்டுமென்ற கருத்தும் அரசியல் வட்டாரங்களில் அடிபடலாற்று. காரிருளில் தோன்றும் ஒளி போன்று குறித்த ஒப்பந்தத்தை நீக்குவது புத்திசாதுரியமாகாதென்ற கருத்தும் இப்போது எழுந்துள்ளது. இலங்கை இந்தியச் சிக்கலானது முக்கியமாக இலங்கையையே பெரிதும் பாதிக்குமாகையால் ஒப்பந்தத்தை நீக்கவேண்டியதில்லையென அவர்கள் வாதிக்கின்றனர்.

நிலைமையை நடு நின்று பார்த்தால் டில்லி ஒப்பந்தத்துக்குக் குந்தகம் விளைக்க முனைந்து நிற்பது இலங்கையே என்பது தெளிவாகும். குடியுரிமை மனுக்களை ஆராய்ந்து பதிவு செய்வதில் இலங்கை அரசாங்கம் வேண்டா வெறுப்பாக நடந்து வருவது நாடறிந்ததொன்று. இந்தியா மீது குற்றம் சுமத்தித் தனது கடமையை நிறைவேறச் செய்யத் தவறிய இலங்கை அரசாங்கம் உண்மையாகவே ஒப்பந்தத்தை மதித்து நடக்கவில்லையென்றே கூறவேண்டும். இந்த அழகில் சென்ற ஒக்டோபரில் உண்டான ஒப்பந்தம் தன்பாட்டில் ஒடுங்கிவிட்டது. இதற்கு மீண்டும் உயிர் கொடுப்பது இலங்கை அரசாங்கத்தின் தாராள மனப்பான்மையிலேயே முற்றாகத் தங்கியிருக்கின்றது. பரஸ்பர நல்லெண்ணத்துடன் நடந்து கொண்டால் இச் சிக்கல் நொடிப்பொழுதில் நீங்கிவிடும்.

## மொழிச் சிக்கல்

### கொம்யூனிஸ்ட் கொள்கை

#### திரு. கெனமன் விளக்கம்

யாழ்ப்பாணம்

தாய்மொழிச் சிக்கல் சம்பந்தமாகக் கொம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கையை வடபகுதி மக்கள் மத்தியில் தெளிவாக்குவதற்காகத் தோழர் பீட்டர் கெனமான் எம். பி. சமீபத்தில் நான்கு நாட்கள்வரை யாழ்ப்பாணத்திற்சுற்றுப்பிரயாணம் செய்துவிட்டுக் கொழும்பு திரும்பினார். பருத்தித்துறை, சங்கானை, இணுவில், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் நடந்த பகிரங்கக் கூட்டங்களிலும் மற்றும் சில பொது நிகழ்ச்சிகளிலும் கலந்துகொண்டு தமிழும் சிங்களமும் இந்த நாட்டிற் சமத்துவமுள்ள அரசகரும மொழிகளாக்கப்பட வேண்டுமென்பதை வற்புறுத்திக் கூறினார். வரவுசெலவுத் திட்ட விவாதத்தின்போது தேசிய மொழிகள் சம்பந்தமாகத் தான் தெரிவித்த கருத்து இங்கு தவறான அபிப்பிராயத்தைக் கிளப்பிவிட்டதென்பதை மறுத்துரைத்தகொண்ட திரு. கெனமன் அது பற்றி ஆதாரத்தோடு விளக்கம் கொடுக்கவேண்டியிருந்தது. அது பற்றிய உண்மையை அறிவதில் ஒவ்வொரு கூட்டத்திலும் பொது மக்கள் அதிக ஆர்வம் காட்டினர். ந. கி.

## செல்லம்மாள் பாரதி

### காலமானார்

மகாகவி பாரதியாரின் மனைவியார் திருமதி செல்லம்மாள் பாரதி அவர்கள் சென்ற 30-9-55 வெள்ளிக்கிழமை கடையத்திலுள்ள பாரதியாரின் இல்லத்திற் காலமானார்கள். திருமதி செல்லம்மாள் அவர்கள் 1890இல் கடையம் செல்லப்பா ஐயரின் புதல்வியாகப் பிறந்தார். அம்மையாருக்குத் தங்கம்மாள் பாரதி, சகுந்தலா பாரதி ஆகிய இரு புதல்விகள் உளர். பாரதி அம்மையாரின் ஆன்மா சாந்தியடைவதாக!

### கேள்வி விளம்பரம்

#### கையித்தடை ரோட்

1955ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 18ஆந் தேதி வரை ஷெ ரோட்டு வேலைக்கு, பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தகாரரிடமிருந்து, வேலணை கிராமச்சங்கத் தலைவரால் கேள்விப் பத்திரங்கள் பெறப்படும்.

கேள்விப்பத்திரங்கள் 1955ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 15ஆந் தேதி வரை ஷெ கந்தோரில் ரூபா. 10/- கட்டியதன் பேரில் பெற்றுக்கொள்ளலாம். ஏனைய விபரங்களுக்கு ஷெ கந்தோரில் விசாரிக்கவும்.

(ஒப்பம்) இ. மருதையனார்
தலைவர்

கிராமச்சங்கக் கந்தோர்,
வேலணை, ஒக்டோபர் 1, 1955.

[A 222]

# பாதை ஓரத்தில்

## பாட்டைசாரி

இலங்கையிலுள்ள அரசாங்க உத்தியோகஸ்தர்களுள் 48,000 பேர் கடன்பட்டு வாழ்க்கையை நடத்தி வருகின்றனர். அதாவது வட்டிக்குப் பணம் பெற்றுக் காரியங்களைச் சமாளிக்க வேண்டிய நிலைமைக்குள்ளாகி யிருக்கின்றனர். இவர்களை விடத் தலத்தாபனப் பகுதிகளில் வேலை பார்க்கும் 6,000 ஊழியர்கள் கடன்பட்டிருப்பதாகவுந் தெரிகின்றது வருவாய்க்கு அதிகமாகச் செலவு செய்வதினாலேயே அநேகர் கடனாளிகளாய் விடுகின்றனர். வேறு சிலருக்குப் போதிய சம்பளங் கிடைப்பதில்லையென்பதும் உண்மைதான். ஆனால் ஆயிரத்துக்கு அதிகமாகச் சம்பளம் பெறுபவர்களிலும் ஒரு சிலர் கடன்பட்டுத்தான் காரில் ஓடி ஆடித் திரிகின்றனர்.

'கடன்' என்று சொன்னால் கலக்கம் ஏற்படுவது உண்மைதான். 'கடன்பட்டார் நெஞ்சம்போலக் கலங்கினான் இலங்கை வேந்தன்' எனக் கவிச் சக்கரவர்த்தி கம்பரே புவிச் சக்கரவர்த்தியின் மன நிலையைக் கண்டு அதனைக் கடன்பட்டுக் கதிகலங்குபவர்களின் நிலைமைக்குஒப்பிட்டிருக்கின்றார்.

இந்தக் காலத்திற கடன் பட்டார் கலங்குவதில்லையென அறிஞர் ஒருவர் கூறியிருக்கின்றார். கொடுத்த கடன் திரும்பிக் கிடைக்குமா என்பதை நினைந்து கடன் கொடுத்தவர்களே இக்காலத்திற் கலங்குகின்றனர் என்பது அவர் கூற்று. யார் கலங்கினால் என்ன, இந்தக் 'கடன்' என்ற விஷயம் வாங்குபவருக்குங் கொடுப்பவருக்கும் பெரிய தொல்லைகளைக் கொடுக்கின்றதென்பது மட்டும் உண்மை. ஆகவே, கடன்படேல்!

எம். ஏ., பி. ஏ.

வண்டிக் கணக்கிற் புத்தகங்களை வாங்கி இரவு பகலாகப் படித்தாலும் 'பட்டம்' எதுவும் இல்லாதவர்களுக்கு மதிப்பே இல்லை. நாலு வார்த்தை தானும் எழுதத் தெரியாதவர்கள் எம். ஏ., பி. ஏ. என்று பட்டங்களைச் சுருட்டி வைத்திருப்பார்களாயின் அவர்களைப் படித்த மனிதர்களாகவே சமூகம் கருதுகின்றது. அவர்களும் தாங்கள் ஏதோ வெட்டிப்பிடுங்கி விட்டதாகவே நினைத்துக் கொள்ளுகின்றனர். ஆனால் இக்காலத்தில் எம்.ஏ.,பி.ஏ. பரீட்சைகளில் வெற்றி பெறுபவர்களுக்கு ஒன்றுமே தெரியாதெனச் சென்னைக்குச் சமீபத்தில் வருகை புரிந்த பாரதத்தின் முதலமைச்சர் நேருஜி கூறியிருந்தார். "எம். ஏ., பி. ஏ. பட்டதாரிகள் என்னிடம் வந்துகொண்டேயிருக்கின்றனர். அவர்கள் அறிவற்ற மூடர்களாகவே கணப்படுகின்றனர். அவர்களைப் பயன்படுத்துவதே இயலாத காரியமாய் இருக்கின்றது. இந்தப் பட்டதாரிகளை வைத்துக்கொண்டு என்ன செய்வதென்றே எனக்குத் தெரியவில்லை" யென நேருஜி சென்னையில் அன்னாருக்கு அளிக்கப்பட்ட மாபெரும் வரவேற்பின்போது மிக வருத்தத்துடன் குறிப்பிட்டிருக்கின்றார்.

உலகப் பெருமக்களில் ஒருவரான நேருஜியின் இந்த அனுபவ உண்மையை உணருமபோது பின்வரும் அடிகளை நினைவுக்கு வருகின்றன.

"கல்லாத பேர்களே
நல்லவர்கள் நல்லவர்கள்
கற்றும் அறிவில்லாதஎன்
கர்மத்தை யென்
சொல்வேன்
மதியை யென்
சொல்வேன்"

ஃ

### அடிகளாரின் தீரம்!

குன்றக்குடி அடிகளார் மணி மணியாகப் பேசுந் தவமணி மாத்திரமன்று, அவர்கள் பொதுநலத் தொண்டுகளிலும் ஈடுபட்டு உழைக்கும் பெருந்தகையுமாவார்கள். சமீபத்தில் அடிகளார் ஆற்றிய தீரம் ஒன்று பலருக்கும் ஆச்சரியத்தை விளைக்கக் கூடியது. அதனை இதோ படியுங்கள்.

சிவகாசியிற் சமீபத்திலே நடைபெற்ற கூட்டமொன்றுக்கு அடிகளார் எழுந்தருளவேண்டியிருந்தது. அன்று கடுமழை பெய்த காரணமாக ஓடையில் வெள்ளம் கரைபுரண்டோடிக் கொண்டிருந்தது. மக்கள், கூட்டத்துக்குக் காத்துக் கொண்டிருப்பார்களேஎன்ற கவலை அடிகளாரின் உள்ளத்தில் அலைமோதிக்கொண்டிருந்தது. கழுத்தளவு வெள்ளத்தைக் கடந்து செல்ல வேண்டாமெனக் கிராமத்துப் பெரியோர்கள் அடிகளாரை வேண்டினர். கடமை பெரிதெனக் கொண்டொழுகும் அடிகளார் தன்னந்தனியாகக் காட்டு வெள்ளத்தைஅந்தகாரத்துக்கிடையே நீந்திக் கடந்தார்கள். கரை சேர்ந்ததும் ஒருவருடைய பழைய சைக்கிள் வண்டியில் ஏறி மூன்று மைல் தூரத்துக்கப்பால் உள்ள கூட்டத்துக்கு விரைந்து சென்று விட்டார்கள். இன்பத் தமிழார்வம் நற்பணி எதைத்தான் செய்யத் தூண்டாது!

# ஆசிரியர்கள் உரிமை

## மல்லாகத்திற் கூட்டம்

அகில இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கங்களின் மாபெருங் கூட்டமொன்று 12-10-55 புதன்கிழமை பிற்பகல் 4. 30 மணிக்கு மல்லாகம் பழம் பிள்ளையார் கோவில் வீதியில் நடைபெறும். ஆறுமாத கால தெரிவித்தல் கொடுத்து ஆசிரியர்களை நீக்கிவிடும் விதியை அரசினர் நீக்க வேண்டுமென்பதை எடுத்துக்காட்டி ஆசிரியர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதே இக் கூட்டத்தின் நோக்கமாகும். வலிகாமம் வடக்குத் தமிழ் ஆசிரியர் சங்கத்தின ஆதரவில் நடைபெறும் இக்கூட்டத்தில் திரு. எஸ். ஏச். பேரின்பநாயகன், வடஇலங்கை ஆசிரிய சங்கத் தலைவர் திரு எ. எஸ். கனகரத்தினம், ஆசிரியர் என். தம்பிரத்தினம உட்பட வேறும்பலர் பேசுவார்கள். ஊர்வலம் சுன்னுகச் சந்தையிலிருந்து ஆரம்பமாகும்.

## அரசகரும மொழி

### சிங்களத்துக்கு ஆதரவு

சில தினங்களுக்கு முன்னர் கல்முனைத் தொகுதி எம். பி. ஜனாப் ஏ. எம். மிர்ஸா அவர்களின் முயற்சியால் மட்டக்களப்புப் பகுதி எம். பி.க்கள் கூடி ஒரு மகாநாடு நடத்தினர். இம் மகாநாட்டில் உதவி அமைச்சர் திரு. வி. நல்லையா, பட்டிருப்புப் பிரதிநிதி திரு. எஸ். எம். இராசமாணிக்கம் ஆகியோரும் பங்குபற்றினர். இம் மகாநாட்டில் சிங்களம் மாத்திரமே அரசகருமமொழியாய் அமைய வேண்டுமென ஒப்புக்கொள்ளப்பட்டதெனத் தெரிகின்றது.

### 'ஈழகேசரி' விற்பனையாளருக்கு:

'ஈழகேசரி' விற்பனையாளர் தம்க்கு வழக்கமாக அனுப்பப்பெறும் பிரதிகளைக் கூட்டவோ, குறைக்கவோ விரும்பினால் பிரதி வாரமும் புதன்கிழமைக்குள் தெரிவிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

அதிபர்

### கேள்விப் பத்திர அறிவித்தல்

#### குடத்தனை — வரணி ரோட்

மேறபடி வேலையை ஒப்பந்தமாக எடுத்துச் செய்ய விரும்புவோர் 1955ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 22ஆந் திகதி சனிக்கிழமை பகல் 10 மணிக்கு முன் கிராமச் சங்கத் தலைவருக்கு மனுப் பண்ணல் வேண்டும். மனுப்பண்ண விரும்புவோர் 1955ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 20ஆந் திகதி பகல் 12 மணிக்கு முன் குடத்தனைக் கிராமச் சங்கக் கந்தோரில் ஒவ்வொரு விதிடாப்புக்கும் ரூபா 25/. பிணைப்பணமாகக் கட்டிப் பெற்றுக்கொள்ளவேண்டும். வேறு விபரங்கள் அறிய விரும்புவோர் மேற்படி கந்தோரில் அறிந்துகொள்ளலாம்.

(ஒப்பம்). A. V. பொன்னு
குடத்தனைக் கி. ச. தலைவர்

குடத்தனைக் கி. ச. கந்தோர்
1-10-55

[A 221]

### மட்டக்களப்பில்

## ஈழகேசரி

கிடைக்குமிடம்:

கலாநிதி புத்தகசாலை,
30, பெரிய தெரு,
மட்டக்களப்பு




லண்டனில் இந்தியத் தூதுவராகப் பதவி வகிக்கும் திருமதி விஜலட்சுமி பண்டிதர் அவர்கள் சென்ற 5-10-55 புதன்கிழமை ஐக்கிய நாடுகள் சங்கத்தின் குழந்தை நிதிக்காகப் பணம் சேகரிக்கும் பணியை ஆரம்பித்து வைத்தார்கள். வாழ்த்து இதழ்கள் விற்பனை செய்வதன்மூலம் இந் நிதிக்கு உலகெங்கணும் பணம் சேகரிக்கப் படுகிறது.

## மொழிப் பிரிவினை

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

காரிகளிடம் இதைப்பற்றிக் குறிப்பிடும்போது 'விருப்பமின்றேல் வெளியேறு' என்ற கட்டளைகளும் கிடைப்பதாக அறிகின்றோம். உழவுமாடு, விதைநெல் முதலியவற்றுக்காக சிங்களருக்கு ஆளுக்கு 1000 ரூபாய் வரை கிடைக்க, மற்றையோர் 250 ரூபாய் மட்டுமே பெறுகின்றார்கள். இத்தகைய பேதமான ஆட்சி எப்படி, யார்மூலம், கிடைத்ததென்பது ஆராயவேண்டிய ஒன்றாயிருக்கிறது.

### விவசாய மாணவர்

இப்பகுதியில் உள்ள காரடியனூற்றுக் கமத்தொழிற் பாடசாலையிற்பயின்ற மாணவர்கள் அங்கங்கே உழவு தொழிலைப் புது முறையிற் கையாண்டு பயன் கூட்டி வருகின்றார்கள். யப்பானிய முறைப்படி மட்டக்களப்பு வயலொன்றில் ஏக்கருக்கு நூற்றுறு புசல்வீதம் விளைவு காட்டிய அத்தகைய மாணவரின் திறமை பாராட்டப்பட வேண்டியதாகும். இதுவே இலங்கையிற் கிடைத்த கூடிய வீதமான விளைச்சலென்றும் சொல்லப்படுகிறது. இது ஏறக்குறைய நூற்றைம்பது ஏக்கருக்குரிய விளைவின் சராசரிக் கணக்காகும்' கமத்தொழிலிற் புது முறைப் பயிற்சிபெற்ற மாணவருக்குக் காணி கொடுப்பதென்று 1-10-55இல் மட்டக்களப்புக் கசேரியில் ஒரு கூட்டத்தை மாகாண அதிபரும் கூட்டியிருக்கிறார். மாணவர் சிலர் ஆளுக்கு ஆறு ஏக்கர் வீதம் காணிபெறும் இத் திட்டம் நாட்டுக்குப் பெரிதும் நன்மை பயக்கக்கூடியதென்று சொல்லலாகும்.

### காந்தியின் உருவச்சிலை

உலகம் போற்றும் உத்தமர் காந்தியினது உருவச்சிலையொன்றை மட்டக்களப்பு நகர் நடுவில் நிறுவுதல் வேண்டும் என்று இங்குள்ள காந்திய சேவாசங்கம் செய்துள்ள முடிவு எல்லாராலும் வரவேற்கப்படுகின்றது. நகரசபையில் உள்ள அங்கத்தவர்களும் இவ்வாறான நல்ல முடிவுகளைப் பற்றியபோது, அரசியற்கட்சி வேற்றுமைகளைக் கட்டிக்கொண்டு நில்லாது, ஒன்றுபட்ட தீர்மானத்துக்கு வந்துவிடுவது பெரிதும் போற்றத்தக்கதாகும். இந்தச் சிலைக்கான வேலையை ஒப்புக்கொள்ள நல்ல கொந்தராத்துக்காரர்கள் இசைந்து விட்டதாகவும் தெரிகிறது. இது சிறைவேறும்போது மக்கள் பலரும் வேற்றுமையின்றிப் போற்றும் ஓர் உத்தமரது சிலை மட்டக்களப்பு முற்றவெளியினை அணி செய்து நிற்கும் என்று நாம் பெருமை கொள்ளலாகும்.

★ பண்ணாகத்தில் நடைபெற்ற சர்வோதய மகாநாட்டின் கடைசிநாள் நிகழ்ச்சிக்குக் குன்றக்குடி அடிகளார் தலைமை தாங்கி ஆற்றிய அறிவுரையின் சாரம் இது.

# சட்டமும் சமுதாயமும் அப்பாவிகளுக்குத் தண்டனை குற்றவாளிகள் தப்புகின்றனர்

குன்றக்குடி அடிகளார்

சமுதாயத்தைச் சூழ்ந்துள்ள பல்வேறு சீர்கேடுகளையும் எப்படித் திருத்த முடியுமென்பது இன்று மக்கள் மனதிலெழுந்துள்ள ஒரு முக்கிய கேள்வியாகும் சட்டத்தினுற் சமுதாயத்தைத் திருத்திவிடலாமெனச் சிலர் எண்ணுகின்றனர். இதிலே கருத்து மாறுபாடு அதிகமாகக் காணப்படுகிறது. சட்டத்தைச் சிருட்டித்தவர்கள் அரசியல் வாதிகளேயாவர். அவர்கள் வாழத் தொடங்கியபோதே தம் வாழ்க்கை வசதிக்காகச் சட்டத்தை உருவாக்கிக் கொண்டார்கள். ஆனால் அந்தச் சட்டமானது ஆரம்பத்தில் உருவாக்கப்பட்ட நிலைமையில் இன்றில்லை. அதற்கு வியாக்கியானம், வியாக்கியானத்துக்கு வியாக்கியானமென்று முடிவில்லாமல் நீண்டுகொண்டே போகிறது. அரசியல் உலகம் இன்று சட்ட நிர்மாணத்திலேயே தன்னை வழிநடத்திச் சென்றுகொண்டிருக்கிறது. ஆயினும் காலப் போக்கினுற் சட்டம் செல்வாக்கிழந்து விட்டது. இருப்பினும் அதைக் காப்பாற்ற ஓர் அதிகாரவர்க்கம் உற்பத்தியாக்கப் பட்டுள்ளது. அந்த அதிகார வர்க்கத்துக்காகத்தான் சட்டம் இப்போது உயிர் வாழ்கிறது.

### சட்டமும் நீதியும்

இந்தச் சட்டத்தை வைத்துக்கொண்டு சமுதாயத்தில் நீதியை நிலைநாட்ட முடியுமா? "இதுவரை சட்டம் அப்பாவிகளைத்தான் தண்டித்திருக்கிறது. குற்றவாளிகளைத் தப்பச் செய்திருக்கிறது." என்று ஒரு சினத்துப் பேரறிஞர் குறிப்பிட்டுள்ளார். அதனுல் சமூகத்தைத் திருத்த முடியவில்லை. ஒருவனைக் கொலைசெய்த பிறகுதான் அது விளித்தெழுகிறதே தவிரக் கொலை நிகழ்வதைத் தடுக்க ஒரு போதும் முயன்றது கிடையாது. கொலை செய்வது குற்றம், கொலை செய்ய முயற்சிப்பது குற்றம் என்று மட்டுமே சட்டம் சொல்கிறது. கொல்ல நினைப்பது குற்றம் என்று எப்போதாவது அது சொன்னதுண்டா? நினைத்த குற்றத்துக்குத் தண்டனை வழங்கியிருக்கிறதா? அவ்விதம் செய்வதற்கு அதனிடம் சக்தியே கிடையாது; யோக்கியதையுமில்லை. ஆகவே, கையையும் வாயையும் சட்டத்தினுல் திருத்த முடியுமே தவிர நெஞ்சைத் திருத்த முடியாதென்பது இப்போது தெளிவாகி விட்டது. அதன் தோல்விக்கும் இதுவேதான் காரணமாகும். நெஞ்சு திருந்தாதவரை கையையும் வாயையும் திருத்திப் பயனேதுமில்லை. சட்டம் மனிதனுக்குப் பயனளிக்க வேண்டுமானுல் அதற்கு மனதைத் திருத்தும் சக்தி யேற்பட வேண்டும்.

### சமுதாயமும் கலையும்

கலைத்துறை மூலம் சமுதாயத்தைத் திருத்த முயல்கின்றனர் இன்னெரு சாரார். இன்றைய கலையினுல் அது சாத்தியமாகுமா? இன்று கலையானது மனித சமுதாயத்தை ஒட்டிச் செல்லவில்லை. பணவசூலைப் பின்பற்றித்தான் அது சென்றுகொண்டிருக்கிறது. கலை, கலைக்காக இருக்கின்ற வரையிலேதான் சமூகத்தைக் காப்பாற்ற முடியும். அது, என்று ஒரு தொழிலாக மாறியதோ அன்றே தனக்கு ஆபத்தையும் தேடிக்கொண்டது.

ஆகவே, சமுதாயத்தைச் சட்டத்தினுலும், கலையினுலும் திருத்த முடியாதென்பது இப்போது தெளிவாகிவிட்டது. கடவுள் நம்பிக்கை ஒன்றினுல்தான் அதனைச் சாதிக்கமுடியும். இந்த நம்பிக்கை வளருமானுல் சூது, வாது வம்பு ஆகியவற்றுக்கிடமில்லாமல் போய்விடும். வழக்கறிஞர்கள் வேறு தொழிலை நாடவேண்டியேற்படும். எது இராம இராச்சியம் என்று கருதுகிறோமோ அதனைக் கடவுள் நம்பிக்கையினுல் மட்டுமே சாதிக்க முடியும். பொலீஸும் மற்றும் பாதுகாப்புகளும் இருக்கும் போதே இன்று கொலை களவுகள் அதிகமாக நடந்துகொண்டிருக்கின்றன. அப்பாதுகாப்புகள் எவையும் இல்லாவிடின் தேசிய சக்தியின் கொடுமை இன்னும் எவ்வளவாகப் பெருகிவிடும். இந்தக் குற்றச்சாட்டுக்கள் யாவற்றிலுமிருந்து சாட்சி வைத்து வழக்காடித் தப்பித்துக்கொள்ள முடியும். ஒரு கொலை நடந்துவிட்டதென்றால் அதன்பொருட்டு வழக்கறிஞர் சாட்சிகளைத் தயாரிக்கிறுரேதவிர ஏற்கன சாட்சிகள்குறிப்பதில்லை இதனுல் குற்றவாளி சட்டத்தை ஏமாற்றிவிட்டுத் தப்பிக் கொள்கிறுன். விடுதலையடைந்த ஒரு கொலைக் குற்றவாளி நான் எல்லாரையும் ஏமாற்றிவிட்டேனே இறைவனையும் ஏமாற்றிவிட என்னுல் முடியுமா என்று அழுதானும். இதை மாஜினி தமது நூலொன்றிலே குறிப்பிட்டுடுள்ளார். பரம்பொருளின் சமூகத்திலே சாட்சிவைத்து ஏமாற்றிவிட முடியாது.

ஆகவே தீமைகளைச் சமூகத்திலிருந்து ஒழுக்கநெறியினுல் தான் ஒழிக்கமுடியும். மதத்தின் பாற்பட்ட ஒழுக்கமே மனச்சாந்தியைத் தரும். அகச்சுத்தம் ஏற்பட்டால் புறச் சுத்தத்துக்கு அவசியமில்லை.

### மத்திய கல்லூரி

இங்குள்ள ஆங்கிலக் கல்லூரிகளுள் பழமை வாய்ந்த ஒன்று மெதடிஸ்த மத்திய கல்லூரி ஆகும். இதன் தலைவராக இவ்வளவு காலமும் இருந்த திருவாளர் எஸ். வி. ஏ. சோமநாதர் இளைப்பாறிச் செல்லுவதால் திரு. வி. ரீ. ஞானசூரியம் அவர்கள் புதிய தலைவராக நவம்பர்மாத முதற் திகதியுடன் நியமிக்கப்பட்டுள்ளார். பழுத்த கிறிஸ்தவரும் கடமையிற் கருத்து மாருதவருமாகிய ஞானசூரியம் அவர்கள் அட்டாளைச்சேனை, அரசடி ஆகிய தமிழ் ஆசிரிய கலாசாலைகளின் அதிபராக இருந்து, இன்று அரசினர் கல்லூரியில் ஆசிரியராகக் கடமை புரிபவர். சிறந்த தொண்டரும் மத்திய கல்லூரியின் உப அதிபராகக் கடமை புரிந்து வருபவருமான திரு. சேதுகாவலர் அவர்களின் சுகவீன நிலைமை, அன்னுரைத் தலைவராக வர முடியாமற் செய்தது என்று உடனுசிரியர்களும் மாணவரும் மிகுதியும் வருத்தம் தெரிவிக்கின்றுர்கள். எனினும், ஞானசூரியம் அவர்களின் சேவையாற் கல்லூரி மேலும் சிறப்புறும் என்று பொதுவாக எதிர்பார்க்கப் படுகின்றது.

அமுதமொழி

மக்கள் எதையும் பறிகொடுக்கலாம், ஆனுல் உரிமையை மட்டும் பறிகொடுக்கலாகாது.

— திரு. வி. க.


## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. 11725**

உரும்பராய் கிழக்கு
தம்பையா வயித்திலிங்கம்
கைம்பெண் செல்லம்மா
வழக்காளி

கொக்குவில் கிழக்கு, உடையாவீட்டு ஒழுங்கை
1. சீனியர் இரத்தினமும் பெண்
2. செல்லம்மாவும்
எதிரிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 11725ஆம் இலக்க வழக்கில் எனுக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை, 1955ஆம் ஹூ கார்த்திகை மீ 19 உ சனிக்கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

**தீர்வைத் தொகை:—** முதல் வட்டி ரூபாய் 3165/ம் இன்னும் ரூ. 2500/க்கு 29-9-54 தொடக்கம் 25-11-54 வரைக்கும் 9வீத வட்டியும் அதன் பின்பு முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 206/53; அதாவது சென்ற செலவு ரூ. 136/53; வெலியாத்துச் செலவு 23/65; பின்வருஞ் செலவு ரூ. 146| 35ம் ஆனுல் கீழ் விபரிக்கப்படுங் காணி 1948ஆம் ஆண்டு ஆவணி மீ 9ஆம் தேதி நொத்தாரிஸ் செ. ஆறுமுகம் முன்பாக 447ஆம் இலக்கத்தில் ரூ. 1100/க்கும் 10வீத வட்டிக்கும் முன்ஈடாகக் கட்டப்பட்டிருப்பதாலும் அவ்வீட்டை யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் M. B. 12ம் இலக்க வழக்கில் சித்தாரித்து இருப்பதாலும், இந்த ஈட்டு உரித்தைக்கண்டு இக்காணி விலைப்படும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் நல்லூர்க் கோவிற்பற்று கொக்குவில் இறை "சோதியன்சீமா" நிலப்பரப்பு 8உம் (எட்டும்) வீடும் பயிர்வகைகளும் கிழக்கெல்லையிலிருக்கும் கிணற்றில் பங்கும் ஆனுல் வடக்கெல்லைக்காணியிலிருந்து மேற்கெல்லைக் காணிக்குரிய வளவாய்காற் பாவிப்புரித்து புறநீங்கலாக எல்லை: கிழக்கும், தெற்கும் ஒழுங்கை வடக்கு அப்பாக்குட்டி பெண் செல்லத்துக்குடைய வாதனம். மேற்கு கந்தர் சீனியரி ஆதனம்,

ச. அம்பலவாணர்
Commissioner & Valuer
19, வேம்படி ரோட்,
யாழ்ப்பாணம்- 3-10-55 [A225]

வித்தியா பிரசுர சபையினரால்
அங்கீகரிக்கப்பட்ட

## கணித புத்தகங்கள்

ஆரும் வகுப்புத் தொடக்கம் எஸ். எஸ். ஸி. வகுப்பு வரையும் தொடர்ந்து கற்கக்கூடிய முறையில் இலகுவான தமிழ் நடையில்

பரமேஸ்வர (தமிழ்) ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக் கணிதப் போசிரியராய் இருந்தவரும் பரமேஸ்வரா கல்லூரிக் கணித விஞ்ஞானப் பகுதிப் பிரதம ஆசிரியராயிருப்பவருமாகிய திரு. ச. சிதம்பரப்பிள்ளை B. A., B. Sc. (Lond) அவர்களால் எழுதப்பட்டவை.

| | | |
|---|---|---|
| 1. | எண் கணிதம் | 2-75 |
| 2. | கேத்திர கணிதம் | |
| | 1ஆம் புத்தகம் | 3-00 |
| | 2ஆம் ,, | 2-50 |
| | 1ஆம், 2ஆம் புத்தகங்கள் | 5-00 |
| 3. | அக்ஷர கணிதம் | |
| | 1ஆம் புத்தகம் | 3-00 |
| | 2ஆம் ,, | 3-00 |
| | 1ஆம், 2ஆம் புத்தகங்கள் | 5-50 |

எல்லாப் புத்தகசாலைகளிலும் விற்பனைக்கிருக்கின்றன.

# வாரச் செய்தி

அவுஸ்திரேலியா, தாய்லந்து, நியூஸீலந்து ஆகிய நாடுகள் இலங்கை முதலமைச்சரைத் தங்கள் நாடுகளுக்கு அழைத்துள்ளன. அந்நாடுகளின் அழைப்பை முதலமைச்சர் ஏற்றுக்கொண்டார். இம்மாதம் 25ஆம் திகதி அவர் தமது சுற்றுப்பிரயாணத்தை ஆரம்பிப்பார்.

### கண்களை அளித்தல்

ஒருவர் தான் இறந்தபின் தனது கண்களைப் பிறருக்கு ஒட்ட வைப்பதற்காக அன்பளிப்புச் செய்யச் சட்ட முறைப்படி அனுமதி கொடுக்கவேண்டும் எனச் சுகாதார அமைச்சர் ஈ. ஏ. நுகவெல கொண்டுவந்த பிரேரணையை அரசாங்கம் அங்கீகரித்துள்ளது. இதற்கான சட்டமொன்றை அமைச்சர் விரைவில் மக்கள் சபையிற் சமர்ப்பிப்பார்.

### இருதலைக் கன்று

கொண்டகலப்பகுதியிலுள்ள திம்புல என்னும் தோட்டத்தில் இராமசாமி என்னும் தொழிலாளிக்குச் சொந்தமான பசுவொன்று இரண்டு தலைகளையுடைய கன்று ஒன்றை ஈன்றது. இக்கன்று பிறந்து நான்கு மணிநேரத்தில் இறந்துவிட்டது.

### பௌத்த தர்மம்

ஒரு மாபெரும் சமுதாயமாய் வெளியுலகம் தம்மை மீண்டும் மதிக்குமளவு நாட்டில் பௌத்த தர்மத்தை உயர்த்துவது அரசாங்கத்தின் நோக்கமாகுமென இலங்கை முதலமைச்சர் சேர் ஜோன் கொத்தலாவல சமீபத்தில் அனுராதபுரியில் நடைபெற்ற கூட்டமொன்றிற் பேசும்பொழுது குறிப்பிட்டார்.

### மருந்துத் தொழிற்சாலை

டென்மார்க்கைச்சேர்ந்த ஒரு வர்த்தகத் தாபனம் கொழும்பில் 50 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு மருந்துத் தொழிற்சாலையை நிறுவ விரும்புகின்றது. இத் தாபனத்தின் பிரதிநிதி எஸ். எஸ். என். றொப்ற் சமர்ப்பித்த விண்ணப்பத்தினைக் கைத்தொழில் அமைச்சர் காரியாலயம் ஆராய்ந்து வருகின்றது.

### மதம் மாற்ற......

மதம் மாற்றுபவர்களைக் கட்டுப்படுத்தி அவர்களுக்கு உத்தரவுப் பத்திரம் வழங்கக் கோரும் தனிப்பட்டவர் தீர்மானம் ஒன்று இப்பொழுது இந்திய மக்கள் சபையில் விவாத நிலையில் இருக்கின்றது.

### எகிப்தின் உரிமை

கொம்யூனிஸ்டுகளிடமிருந்து யுத்த ஆயுதங்களை வாங்கப்போவதாகவும் எகிப்தின் உரிமையில் மேற்கு வல்லரசுகள் தலையிட நியாயமேயில்லையெனவும் ஆசிய நாடுகளிற் சுற்றுப்பிரயாணம் செய்துவிட்டுக் கெய்ரோ திரும்பிய எகிப்து உதவி முதலமைச்சர் கமால் சலீம் தெரிவித்தார்.

### கண்கள் குருடாயின

கள்ளத்தனமாக உள்நாட்டில் இரசாயனப் பொருள்களைக் கொண்டு செய்யப்படும் ஒருவகை மதுவை அருந்திய பஞ்சாப்பைச் சேர்ந்த பலருக்குக் கண்கள் குருடாகியிருப்பதோடு சயரோகமும் ஏற்பட்டிருப்பதாக டக்டர்கள் வெளியிட்டுள்ள ஓர் அறிக்கை கூறுகின்றது.

### அழகுதரும் உணவு

ஐரோக்க அழகி ஐனி பாபஸ் தமது அழகின் இரகசியத்துக்குச் சைவ உணவே காரணமெனத் தெரிவித்துள்ளார். அவரது தாயார் இளமைபோற் காணப்படுவதற்கும் சைவ உணவே மூல காரணமாம்.

### களவுப் பொருள்கள்

தென்னிந்தியாவிலிருந்து இரண்டு கள்ளத் தோணிகளிற் கடத்திவரப்பட்டதாகச் சொல்லப்படும் 7 பீடி மூட்டைகளையும் வேறு சில களவுப்பொருள்களையும் எருக்கலம்பிட்டிக் கடற்கரையில் வைத்துத் தோட்டவெளி இராணுவத்தினர் கைப்பற்றினர்.

கிராமியக் கவிதை : : அ. ஸ. அப்துஸ் ஸமது

# காட்டு முல்லைப் புன்னகை வீட்டு மல்லிகையாய் மலர்ந்தது

அவள் ஏழை. அவள் தாய் அப்பம் சுட்டு விற்பவள். இதற்காக ஒவ்வொரு நாட்பின்னேரமும் அவள் மாவிடிப்பது வழக்கம். தாயோ வயதானவள். அவளால் அதிகமாக வேலைகள் செய்வதோ முடியாத காரியம்.

அவளோ பருவக் குமரி. பூப்பெய்தியும் பல வருடங்களாகிவிட்டன. வறுமையின் காரணமாக மணவாழ்வு இன்னும் கிட்டவில்லை. இற்றைவரை கலியாணப் பேச்சுக்கால் எதுவுமில்லை ஆனால் மாமன மகன்மீது அவளுக்கு எப்பொழுதுமே ஒரு கண். ரோஜா மலர் காற்றுக்கசையும்போது அதை முத்தமிட விரும்பாத வண்டுதான் எது? அவள் அவன் மீது காட்டும் அன்பும், மதிப்பும் அவனைக் கவர்ந்தன. ஆனால் காட்டு முல்லையாக இருக்கும் அவள் அழகு தான் வீட்டு மல்லிகையாக இன்னும் காலம் வாவில்லை. அவன் வருவான்; அன்பாக அளவளாவுவான், இன்பக் கதைகள் பேசுவான்; மச்சி என்று கொண்டாடுவான்; போய்விடுவான். இவர்களுடைய இந்த நிலை, அகராதியில்லாத பாஷையாக, அர்த்தம் விளங்காத காதலாகத் தானிருந்தது. தக்க சந்தர்ப்பத்தை எதிர் பார்த்துக்கொண்டிருந்தான் அவன்.

அன்று வழக்கம்போல அவள் மாவிடித்துக் கொண்டிருந்தாள். அவனும் வந்தான். மாவிடிப்பதென்றால் இலேசான காரியமல்ல. அவள் துள்ளித் துள்ளி ஒவ்வொரு உலக்கை போடும்போதெல்லாம் அவள் அங்கங்கள் எல்லாம் அசைந்தாடும். முகத்தில் முத்துருளுவதுபோல வெயர்வை சொட்டிக்கொண்டிருக்கும்.

முத்தான முத்துருள
முகத்தால வேர்வைசிந்த
தங்கரெட்ண மார்குலுங்கத்
தனித்துலக்கை ஏனெறிந்
தாய்?

என்றான் அவன். திடீரென நிமிர்ந்துபார்த்த அவள் வெட்கத்தால் நாணிக்கொண்டு, நெற்றியில் வழிந்தோடிய வெயர்வைத் துளியைத் தன் மலர்க் காத்தால் வருடிவிட்டாள். "முகத்தால் வேர்வை சிந்த" என்பதையே, முகத்திலிருந்து முத்துக்களே சிதைந்து உருண்டோடுவதுபோல, என்று அவன் கூறுவதிலிருந்து அவன் பரிவுதான் என்னவென்று தெரிகிறது. "தங்கரெட்ண மார்குலுங்க" என்பது உண்மையிலேயே அவள் அவன் அன்புக் காதலிதான் என்பதை உரிமையோடு உணர்த்துகிறான். "தனித்துலக்கை ஏனெறிந்தாய்?" என்று கேட்கும்போது அவனுடையும் துன்பம், அவள் எதிர்கால இல்லறவாழ்வின் நல்லறத்திற்கு, மனைவி மீது கொள்ளவிருக்கும் மங்காத அன்புக்கு ஓர் எடுத்துக்காட்டு. அவள் நினைப்பும் அவன் நினைப்பும் ஒன்றுபட்ட இச் சந்தர்ப்பத்தைப் பூரணமாகப் பயன்படுத்தி, தன் உள்ளத் தாபத்தை அவனுக்கு உணர்த்துகிறாளவள்:


பேர்நாமம் வீசஒரு
பெருநாட்டான் உண்டு
மென்றால்
மார்குலுங்க மாவிடிக்க
மனம்வருமோ சொல்ராசா!

இவள் இன்னாருடைய மனைவி என்று சொல்ல ஓர் ஆண் மகன் இருந்தால், இப்படி நான் கஷ்டப்பட வேண்டுமா? என்று அவள் கேட்பதில் ஒரு பெரிய பொருள் பொதிந்திருக்கிறது. அந்தப் பேர்வீசும் "பெருநாட்டான்" யார்? என்பதுதான் கேள்வி. அந்தக் கேள்விக்கு உரிய விடையையும் அவள் வேறுவிதமாகக் கூறிவிடுகிறாள். ஆமாம், முன்னிலையில் நிற்கும் அந்த ராசாவைத்தான் அவள் படர்க்கையாகக் கூறிவிடுகிறாள். பெண்கள் விஷயமே தனி. தலையைச்சுற்றி மூக்கைத் தொடுவார்கள். உள்ளக் கருத்துக்கள் எளிதாக நேரில் வரா. ஆனால் வேறு பல உருவங்கள் கொண்டு ஊர்வலம் வரும். இது தெரியாதா அவனுக்கு. அவன் ஒரு புன்னகை செய்தான்; அப் புன்னகையில் இருவரது எதிர்கால இன்ப வாழ்வும் மலர்ந்து மணம் வீசிக்கொண்டிருந்தது.

[குறிப்பு:—பெருநாட்டான் என்பது மட்டக்களப்பு வழக்குத் தமிழிலுள்ள ஒரு சொல். அது கணவனைக் குறிக்கும் ஓர் உயர்வுநவிற்சி. பெரிய நாட்டை உடைய அரசன் என்று பொருள் கொள்ளலாம்.]

## சீமான் யார்?

நயினை — கவி ஆ. இ.




இதில் அடங்கிய வெண்பா

மதுரசந்த மீதுயர்ந்து மாரு நடையிற்
புதுமணமார் துள்ளிதயப் பூசிர்த்—ததுசிலிர்த்தோர்
காலருமா கோகிலமாய்க் கானவளம் பாடுவனே
ராவணமார் சிமா நயந்து.

## சுதேசிவாரம்

### நாட்டிலே நல்லாதரவு

சுதேசியமே காந்தியம், சமூக சேவையே சிறந்த பணி என்ற உயரிய இலட்சியத்துடன் சேவை செய்ய முன்வந்திருக்கும் யாழ்ப்பாணக்கலை — கைப்பணிக் கழகத்தின் சுதேசி வாரத்துக்கு நாட்டில் அமோகமான ஆதரவு கிடைத்துள்ளது. யாழ்ப்பாணத்து நெசவு கைத்தொழிலை அபிவிருத்தி செய்யும் நோக்கமாக 7-11-55 தொடக்கம் 14-11-55 வரை இவ் வாரம் கொண்டாடப்பட விருக்கிறது.

இக் கழகத்தின் தலைவர் திரு. எம். ஸ்ரீகந்தா (மாகாண அதிபர்) சமீபத்தில் வெளியிட்ட அறிக்கையொன்றில் எங்களுக்கு வேண்டிய உடையை இறக்குமதி செய்வதன் மூலம் ஆண்டுதோறும் கோடிக்கணக்கான ரூபாய் வெளிநாட்டுகளுக்குச் செல்வதையும் அதனால் நாட்டின் பொருளாதாரம் மோசமடைவதாகவும் உள்நாட்டுப் புடைவையை ஆதரிப்பது அவசியமென்றும் குறிப்பிட்டிருக்கிறார். சர்வோதய மகாநாட்டையடுத்து இச் சுதேசிவாரம் கொண்டாடப் படவிருப்பது பொருத்தமானதேயாகும்.

## கணேச பல்கலைக் கழகம்

### காந்தி ஜயந்தி விழா

கணேச பல்கலைப் பயிற்சிக் கழகத்தாரால் சென்ற 2-10-55 ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் பெரியகடை பாரதி பாஷிய வித்தியாசாலை மண்டபத்தில் காந்தி ஜயந்தி கொண்டாடப்பட்டது. கழகத்தலைவர் பிரமஸ்ரீ பா. தியாகராஜக் குருக்கள் தலைமை தாங்கினார். அடிகளாரின் வாழ்க்கை வரலாற்றைச் சுருக்கமாகக் கூறினார். பாரதி பாஷிய வித்தியாசாலைத் தலைமை ஆசிரியர் திரு கா. தம்பிரத்தினம் அவர்கள் பேசுகையில் அஹிம்சை, சத்தியம், கடவுட்பிரார்த்தனை ஆகியவை காந்திஜியினால் முக்கியமாகக் கைக்கொள்ளப்பட்டவை எனக் கூறினார்.

ஆசிரியர்கள் வி. கே. கந்தசுவாமி, திரு சி. சிவரத்தினம், பொ. ஜகந்நாதன் ஆகியோர் காந்திஜியின் அரும் பெரும் தொண்டுகளை விரிவாக எடுத்துரைத்தனர்.

இணைக்காரியதரிசி திரு பெ. பாலசுப்பிரமணியம் அவர்கள் அனைவருக்கும் நன்றி கூறினார்.

—நிருபர்

## ஊர் வதந்தி

❖ ❖ கொண்டோடி ❖ ❖

- ● ருஷியாவைப்பற்றிப் பேசும்போது முதலில் வருவது கரடியின் நினைவுதானும்.
- ○ சோவியத்துக் கரடிக்குப் பிரிட்டிஷ் சிங்கங்கூட அடங்கி ஒடுங்குவதுண்டாம்.
- ○ அஞ்சாத கரடிகளிற்சில அன்புக் காணிக்கையாக இந்தியாவுக்கு வரப்போகின்றனவாம்.
- ○ அவற்றோடுவரும் புருக்கள் இருநாடுகளினதும் சமாதானத்திற்கு எடுத்துக்காட்டாக விளங்கக்கூடுமாம்.
- ● சமாதானத்தையும் சாந்தியையும் அஹிம்சை நிலைநாட்டுமாம்.
- ○ அமைதியை நிலைநாட்டுமாறு மூளாய் கூட்டுறவு மருத்துவமனை விளம்பரமொன்று கூறுகிறதாம்.
- ○ அந்த விளம்பரத்தின் நோக்கம் நோயாளிகளின் அமைதியைக் கெடுக்கக்கூடாதென்பதேயாம்.
- ○ ஆனால் அருகிலிருந்து ஒரு டக்டர் நாய்கட்டுப்பழகுவதால் அமைதிக்குப் பதில் அதிர்ச்சிகூட ஏற்படுகிறதாம்.
- ● ஐயாக்களினால் அதிர்ச்சியேற்பட்டால் அது ஆச்சரியப்படக்கூடியதொன்றல்லவாம்.
- ○ அதிர்ச்சியடைந்த ஒருசில சோதிட நிபுணர்கள் அம்பிற்பட்ட மான்போல அங்குமிங்கும் அலைந்து திரிகிறார்களாம்.
- ○ அவர்களுக்கு ஆத்திரம்வரக்கூடிய செயலை விளைவித்தவர்கள் விளைபொருட்சங்கமொன்றின் அங்கத்தவர்களாயிருப்பவர்களாம்.
- ● ஆத்திரம் கண்ணை மறைத்த காரணத்தால் அவர்கள் அடாதடியான காரியங்களிலும் இறங்கப்பார்க்கிறார்களாம்.
- ○ கூட்டுறவு ஸ்தாபனத்தின் கூட்டத்தை விட்டு இடையில் வெளியேறிய எம். பிக்கு ஆத்திரத்துக்குப் பதில் அவமானம் கண்ணை மறைத்திருக்கலாமாம்.
- ○ தலைமைப்பதவி தனக்குக் கிட்டாதெனக் கண்டதும் இருக்கையை விட்டு அவர் எழுந்து வெளியேறினாராம்.
- ○ அரசியல் சட்டத்தில் 29ஆவது விதியை வைத்துக் கொண்டு தமிழ் மக்களை அணுப்புபவர்களுக்கு இந்த மாதிரி அனுபவங்களும் ஏற்படத்தான் செய்யுமாம்.
- ● உண்மைக் காதற் சம்பவங்களுக்கு உயிர் கொடுப்பவர்கள் இளந் தமிழ் எழுத்தாளர்களாம்.
- ○ எழுத்துத்துறையில் இளமை மாறுவிட்டாலும் பாரதி பரம்பரையில் தங்களுக்குப் பங்குண்டென்று பறையடிக்கமட்டும் அவர்கள் தயங்குவதில்லையாம்.
- ○ இவர்களிற் சிலர் உண்ண உறங்க நேரமின்றிப் புத்தகங்கள் எழுதிக்கொண்டிருக்கிறார்களாம்.
- ○ வேறு சில செல்லாக்காசுகள், சில்லறைப் பத்திரிகைகளுக்குக் கட்டுரைகள் கதைகள் எழுதிவிட்டு இரவு பகலாக டமாரம் அடித்துத் திரிவார்களாம்.
- ● கொழும்புப் பத்திரிகைகள் தாபனத்திற் கடமையாற்றிய உதவியாசிரியர் ஒருவருக்கு அங்கிருந்து 'டமில்' பத்திரிகையொன்று வெளியாவது தெரியாதென்ற உண்மை சமீபத்தில் வெளியானதாம்.
- ○ அந்த 'டமில்' பத்திரிகை பற்றிவந்த கண்டனத் தீர்மானமொன்றைத் தாம் கடமைபார்த்த ஆங்கிலப் பத்திரிகையில் அலங்காரம்செய்து வெளியிட்டிருக்காராம்.




### அத்தியாயம் 13

கொழும்பை நோக்கி 'வான்' போய்க்கொண்டிருந்தது. காற்றைக் கிழித்துக்கொண்டு செல்லும் சிட்டுக் குருவியைப்போற் பறந்து கொண்டிருக்கையில், உள்ளே குளிர்ந்த காற்று முகத்திலடித்துக் கொண்டிருந்தது. ஆனால் நடராஜனின் உள்ளம எரிமலையாய்க் கனன்றுகொண்டிருக்கையில், உடலில் மோதும் குளிர்காற்றினால் என்ன பயன்?

இந்த வான் பிரயாணம் இருக்கிறதே; இது புகையிரதப் பிரயாணத்தைவிட எத்தனையோ சௌகரியமானது. திருகோணமலைக் கடைக்காரர்கள் சிலர் வசதிக்காகவும் நேரச் சுருக்கத்திற்காகவும் இந்தப் பயணத்தைச் செய்கிறார்கள். இதிற் பிரயாணம் செய்யும் எல்லாருமே நடராஜனுக்கு நன்கு தெரிந்தவர்கள்தாம். நினைத்த இடத்தில் வானை நிறுத்திச் சிரமபரிகாரம் செய்துகொண்டும், வானுக்குள் குதூகலமாகப் பேசிக்கொண்டும் அவர்கள் எல்லாரும் பிரயாணம் பண்ணுகிறார்கள். ஆனாற் கலகலப்பாக இருக்கும் அவர்களோடு ஒட்டி உறவாட நடராஜனால் முடியவில்லை. பிரயாணிகள் அவனைப் பலதடவை துளைத்துக்கேட்டுக் கடைசியாய் அவர்களும் அலுத்துப் போய்விட்டார்கள். செழுமையான காட்டிலே இலையுதிர்த்துக் காய்ந்து நிற்கும் பட்டமரம்போல நடராஜன் அவர்களிடையே காணப்பட்டான். வான் ஓடிக்கொண்டேயிருந்தது.

நடராஜனுக்கு மகாவலி கங்கை பாயும் தன் கிராமத்தைப்பற்றி எப்பொழுதுமே மனதில் ஒரு பெருமை. அதைவிட முத்தமிழ் வித்தகரான விபுலானந்த அடிகளார் மீது ஓர் அபாரமான பக்தி. அவன் கல்லூரியில் மாணவனாக இருக்கையில் அவரைப்பற்றி அதிகமாக அறியும்வாய்ப்பு அவனுக்குக் கிடைத்திருந்தது அப்போது அவரது பாட்டுக்களை விரும்பிப் படித்திருக்கிறான். அவரின் நீரரமகளிர் என்ற பாடலிலே

மாவலியின் பேரால்
  வழங்கு மணிநதியும்
காவும் பொழிலும்
  கழிமுகமும் புள்ளணிந்த
ஏரியும் மல்கி
  இரத்தினத் துவீபமென
ஆரியர் போற்றும்
  அணிசால் இலங்கை

என்ற அடிகளைப் படிக்கும்போதெல்லாம், அடிகளார் பொதுவாக இலங்கையைப் பற்றியல்ல, மகாவலி நதி நீர்பாய்ச்சும் செழிப்பான தனது கிராமமான மூதூரைத்தான் சிறப்பாகப் பாடியிருக்கிறார் என்று எண்ணிக்கொள்வான். ஏன், அதற்காகக் கல்லூரி நண்பர்களோடு அடித்துப் பேசுவான். மகாவலிகங்கை மூதூரிலேதானே பாய்ந்து அவ்வூரைச் செழுமைப் படுத்துகிறது என்று பெருமையோடு பேசுவான். தேசியமே ஒரு மாயை என்று சொல்லிச் சர்வதேசியம் பேசும் இந்தக்காலத்தில் நடராஜனைப் பொறுத்தவரை அவன் தேசியம் பேசியது கிடையாது. 'கிராமியம்' தான் பேசுவான். அத்தனை பற்று அவன் கிராமத்தின்மீது.

இந்தப்பற்றுக்கு என்ன காரணமோ அதைப்பற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை. ஆனால் கனகம் மூதூரிலேதான் இருக்கிறாள் என்பது, ஆழக் கடலில் முத்தைப்போல அவன் மனதிலே அவனுக்கே தெரியாமலிருந்த ஒரு காரணமாகும்.

ஆகவே, அவன் படிப்புக் காரணமாகத் தன் கிராமத்தை விட்டுப்போக நேரிடும் போதெல்லாம் சொல்லொணாத வேதனையை அனுபவிப்பான். தீவாந்தர சிட்சைக்கு அனுப்பப்படும் கைதியைப் போலத்தான் ஊரை விட்டுப் போகும்போது அவன் மனநிலை இருக்கும். ஆனால், அந்தகார இருளிலேதோன்றும் மின்னல்போல, இன்னும் மூன்று மாதங்களில், தொண்ணூறு நாட்களில் வீட்டுக்கு வரலாம் என்ற நினைவு அவன் மனதுக்கு ஆறுதலாக இருக்கும். திரும்பிவரப்போகிறோம் என்ற பற்றுக் கோட்டிலேதான் அவன் தன் பிரிவின் துயரைச் சகித்துக்கொள்வான்.

ஆனால், இம்முறை அப்படி ஒரு நம்பிக்கையுமே மனதில் இல்லை. ஏன்? இனிமேல் மூதூரிலே அடியெடுத்தே வைப்பதில்லை என்று தீர்மானித்துக் கொண்டான். ஊரைப்பற்றிய செழுமையான எண்ணங்களையும், கனகத்தைப்பற்றிய இனிமையான நினைவுகளையும் படரவிடாததினால் அவன் மனக்கொடி வேரைக் கிண்டிக் கொதிநீர் விடப்பட்டதைப் போலக் கருகிப்போய்க் கிடந்தது. அந்தக்கொடியில் ஏற்கனவே இருந்த இலைகளும் முகைகளும் கருகத் தொடங்கிவிட்டன. புதிதாகத் தளிர்விட அதனால் முடியாது

தன் அழகான கிராமத்தைக் காணமுடியாது, அந்தப் புண்ணிய பூமியில் இனிமேல் மிதிக்கமுடியாது என்றெல்லாம் நடராஜன் நினைத்தபோது, கருகிக் கொண்டிருக்கும் அவன் மனக்கொடியிலிருந்து, காய்ந்த இலைகள் கீழே 'பொட்டு' பொட்டென்று விழுவதைப்போல அவன் உணர்வுகள் சோர்ந்து சோர்ந்து விழுந்தன. அவன் தலையை நிமிர்த்த முடியவில்லை. கைகளை அசைக்க முடியவில்லை. கால்களை ஆட்ட முடியவில்லை. முகத்திற் சிரிப்பை அழைக்க இயலவில்லை.

ஆனால் ஊரையே பாலைவனமாக வெறுத்துவிட வேண்டிய அளவுக்கு என்ன நேர்ந்துவிட்டது. 'தம்பி! நீர் இங்கு வருவது நல்லதல்ல' என்று சாதார

### தீர்மானம்

ணமாகத்தான் அவன் மாமனார் அவனிடம்சொன்னார். இந்த நேரத்தில் அவர் இப்படிச் சொன்னது நல்லதுதான் என்ற முடிவுக்கு மூளையைப் பிரயோகித்திருந்தால் அவன் வந்திருக்கலாம். அதுவும் வேண்டாம். 'மாமா கெட்டார்' என்று அலட்சியமாக எண்ணிக்கொண்டு உலுத்தத்தனமாகவும் இருந்துவிட்டிருக்கலாம். ஆனால் நடராஜனின் மனம் கற்பனைக் கொடிகளை மிக மிக அதிகமாகவே படரவிட்டது. மகாகவி மில்டன் சொல்லியிருப்பதுபோல இந்த மனம் தன் கற்பனையிற் 'சொர்க்கத்தை நரகமாகவும் நரகத்தைச் சொர்க்கமாகவும் மாற்றிவிடும்.' மனித வாழ்க்கையை அவன் உள்ளமும் உடலும் மட்டுமல்ல, மனு தர்மம என்ற கற்பனையும் சேர்ந்துதான் தீர்மானிக்கின்றன. ஏன்? கற்பனைதான் மனிதனின் தரத்தையும் குணத்தையும் உருவாக்குகின்றது. இந்தக்கற்பனை ஓரோர்வேளை சூழவிருக்கும்சொர்க்கத்தையே நரகமாக்கி விடுவதனாலேதான், சிறந்த கற்பனையாளர்கள் பலர் உலகில் வாழ முடியாதவர்களாக, வாழத் தெரியாதவர்களாக, இருக்கிறார்கள். தன் அதீதமான கற்பனையினால் நடராஜனும் வாழத் தெரியாதவனாக, வாழ முடியாதவனாக, ஆகிவிட்டானா?

ஒரு மணியளவில் வான் குருநாகலை அடைந்தது சாரதி வானை நிறுத்த உள்ளேயிருந்தவர்கள் எல்லாரும் ஒரு கடைக்குள்ளே மதிய போசனத்துக்காகப் புகுந்தனர். நடராஜனும் அவர்களுக்குத் தொந்தரவாக இருக்கக் கூடாது என்பதற்காக, அவர்களும் தனக்குத் தொந்தரவு தந்ததற்காக, அங்கே புகுந்து ஏதோ சாப்பிட்டான்.

மறுபடியும் புறப்பட்டபோது நடராஜனின் மனம் தன் திடீர்ப் புறப்பாடு ஊரிலேலே என்ன விளைவுகளை உண்டாக்கியிருக்கும் என்று எண்ணமிட்டது. கனகம் கலங்குவாள் என்று அவன் மனம் சொல்லிற்று. மாமனார் துக்கப்படலாம் என்று எண்ணினான். அப்படி நினைத்தவன், 'துக்கப் படுபவர் ஏன் என்னை முகத்திலடித்தது' போலப் 'போ' என்று சொல்ல வேண்டும் என்று தன்னையே கேட்டான். அந்தக் கேள்வியின் விடையே பரிணாமவாதத்தில் வளர்ந்த ஜீவராசி போலப் படிப்படியாய் வளர்ந்து உருவமற்ற வெறுப்பாய் அவன் மனதை நிறைத்துக்கொண்டு நின்றது. கடைசியாகத் தன் தாயாரைப்பற்றி எண்ணினான்.

வெறுப்புப் புகைபடிந்து இருண்டுகிடந்த அவன் மனம் தான் குடியிருந்த கோயிலை எண்ணிப்பார்த்தபோது சிறிது இலேசாயிற்று. பாவம்! அவன் தனக்காக அழுவாள். அதுவும் தன் தந்தையாருக்குப் பயந்து மௌனமாக அழுவாள். மகனைக் காணவில்லையே என்ற ஏக்கம் அவள் மனதை ஈரச் சேலையை முறுக்கிப் பிழிவதுபோலப் பிழிந்துகொண்டிருக்கையில், அவள் கண்கள் நீரைக் கொட்டும் ஏக்கத்தில் அவளுக்குக் கசம பிடித்தாலும் பிடித்துவிடலாம். ஊணையும் உறக்கத்தையும் துறந்து அவள் தன் நினைவாகவே அழுது கொண்டிருந்தால்......

நடராஜனுக்குப் பயமாக இருந்தது. புகையிற் சிக்குண்ட கண்கள் கண்ணீர் வடிப்பதுபோல, அவன் கண்கள் கண்ணீர்வடித்தன. சகப் பிரயாணிகளுக்குத் தெரியாமற் கண்ணீரைத் துடைத்துக்கொண்டான். மனதில் மீண்டும் கனகம் தோன்றினாள்.

அவள் உடலே வெளிறிப்போயிருந்தது அழுதழுது கண்கள் கலங்கிப் போய் முகம் வீங்கியிருந்தது. அவள் நடராஜனின் காலைக் கட்டிக்கொண்டு கேட்டாள், "அத்தான்; எவரெவரோ செய்த குற்றத்திற்காக என்னையா வதைக்கிறீர்கள்?" என்று.

நடராஜன் தன் காலை உதறிக்கொண்டு கோபமாய்ச் செல்கிறான், "போ; போ; உன் அப்பனைப்போலத்தானே நீயும் இருப்பாய். விடு என் காலை."

கனகம் தேம்பித்தேம்பி அழுதுகொண்டே, தன் மாமியாரின்—நடராஜனன் தாயாரின்—மடியில் வீழ்ந்து அன்று வெருகலுக்குப் போய் இடையிற் திரும்பி வீட்டுக்கு வந்தபோது, தன் தகப்பனார் மாமனாரைக் கடிந்தபோது அழுததைப் போல விம்மிப் பொருமி அழுகிறாள். தாயார் நடராஜன் முகத்தைப் பரிதாபகரமாகப் பார்க்கிறாள். அவள் பார்வையில் 'நீ என் மகன்தான். அதைப்போலக் கனகமும் என் 'மகள்' தான். நீங்களிருவரும் என் இரு கண்களைப் போலத்தான்' என்ற பேசாத பேச்சுத் தேங்கிக்கிடக்கிறது.

இல்பொருளாகிய மாயையிலிருந்து இந்தப் பிரபஞ்சத்தையே சிருட்டித்த கடவுளைப்போல நடராஜனும், தன்மனக் கண்களில் இந்தக் காட்சியைத் தனக்குத்தானே சிருட்டித்துக் கொண்டபொழுது அவன் மனம், கனகத்துக்காக ஏங்கியது; இரங்கியது, அழுதது, விம்மியது, பொருமிற்று அவன் தாயருக்காகவும் கண்ணீர் வடித்தது, கலங்கியது, கதறிற்று.

இந்த நிலையில் நடராஜன் தனக்குள்ளே ஒரு தீர்மானத்துக்கு வந்தான். கொழும்புக்குப் போய்ச் சேர்ந்ததும், தான் சுகமாக வந்து சேர்ந்ததாகவும், தன்னைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம் என்றும் தாயாருக்

(தொடர்ச்சி 12ஆம் பக்கம்பார்க்க)

**யாழ்ப்பாணம் ஐக்கிய லாப நிதி**

*1918 ஆம் ஆ. ஸ்தாபிதமானது*

**வங்கிக்காரர் மூலநிதி 8 இலட்சம் ரூபா**

**இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம்**

**ரூபா 34,36700. 100 ரூபா விகிதமான 8000 பங்குகள்**

பங்குப் பணம் கட்டுமுறை;
மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாதந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு 100 ரூபா திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்,

தினசரிப் பற்று வரவு;
எச்சநிதிசராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்று வரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்:
க்ஷேமப் பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னுங் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம் 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்;
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும்.

இந்தியா நோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்:
நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

வேண்டிய விபரங்களை என்மூலம் அறிந்து கொள்ளலாம்.

S. கனகசபை
சிறப்பர்

[A169]

★ அண்மையில் ஜெனிவாவில் நடைபெற்ற விஞ்ஞானிகள் மகாநாடானது ஆக்க வேலைக்கு அணுசக்தியைப் பயன்படுத்தும் வழிகளை ஆராய்ந்தது. இம் மகா நாட்டுக்கு இந்தியாவின் சார்பில் பிரபல விஞ்ஞானிகளான சேர் சாஹிப்சிங் ஸோக்கி, டக்டர் பாபா ஆகியோர் சென்றிருந்தனர். இம் மகாநாடு பற்றிய இவ்விபரம் 'ஜனசக்தி'யில் வெளியாகியுள்ள கட்டுரையின் சுருக்கமாகும்.

# ஆக்கவேலைக்கு அணுசக்தி

## விஞ்ஞானத்தால் உலகு இன்புறலாம்

### சேர் சாஹிப்சிங் ஸோக்கி

ஐக்கிய நாடுகள் தாபனத்தின் சார்பில் ஜெனிவாவில் ஒரு மகாநாடு கூடியது. அணுசக்தியை சமாதானபூர்வம் பயன்படுத்துவது எப்படி? ஆக்கத்துறைகளில் ஊக்கமாக ஈடுபடுத்தும் வழிவகைகள் என்ன? என்பனவற்றை ஆராய்ந்து விவாதிப்பதற்காக இந்த மகாநாடு கூட்டப்பெற்றது. இது அதிமுக்கியமான மகாநாடு. எழுபத்துநான்கு நாடுகளிலிருந்து விஜயம்செய்திருந்த 1500 பிரபல விஞ்ஞானிகள் பிரதிநிதிகளாகக் கலந்துகொண்டார்கள். 1500க்கு மேற்பட்ட பார்வையாளர்கள் பங்கெடுத்துக்கொண்டார்கள். நூற்றுக்கணக்கான பத்திரிகை நிருபர்கள் இம் மகாநாட்டைப்பற்றிய செய்திகளைப் பிரசுரிப்பதற்காகப் பணியாற்றினார்கள்.

அணுசக்தியைச்சமாதானபூர்வம் உபயோகிப்பது சம்பந்தமாக 1500 விசேஷ கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன. அவற்றில் 450 கட்டுரைகள் நேரடி மகாநாட்டிலேயே படிக்கப்பெற்றன. இவற்றையெல்லாம் ஒன்றுசேர்த்துப் பதினாறு தொகுப்புகளாக வெளியிட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இத்தகைய கூட்டங்களில் அமெரிக்க விஞ்ஞானிகளும் சோவியத் விஞ்ஞானிகளும், பரஸ்பரம் தத்துவ அரசியல் பொருளாதார அமைப்புகள் பற்றியுள்ள வேற்றுமைகளைப் பாராட்டாது கூடிப்பேசினர். நீண்டகால நண்பர்களைப்போல மனம்விட்டுப்பேசினர். விஞ்ஞானத்தை விஞ்ஞானமாகக்கருதி அளவளாவினர்.

இன்று நிலத்திருக்கும் நிலக்கரி, எண்ணெய் செல்வாதாரங்கள் எல்லாம் இன்னும் இருநூறு ஆண்டுகளில் தீர்ந்து போய்விடும். ஹைட்ரோ எலக்ட்ரிக் நிலையங்களின் மூலம் உற்பத்தியாகும் மின்சாரம் ஓரளவுக்குட்பட்டது என்ற உண்மையை விஞ்ஞான உலகம் நன்கறியும். எனவே அணுசக்தி பற்றி விசேஷகவனம் செலுத்தப்பட்டது இயல்பே. அணுசக்திக்கு வளமான வருங்காலம் இருக்கிறது. எண்ணெய், நிலக்கரி முதலியவற்றால் உற்பத்தியாகும் சக்தியுடன் அணுசக்தி வெற்றிகரமாகப போட்டியிடும் என்பதை மகாநாடு தெட்டத்தெளிவாக எடுத்துக்காட்டியது.

யூரேனியம் தோரியம் என்ற உலோகங்கள் இரண்டையும், அணுசக்தியை உற்பத்திசெய்யும் எரிபொருள்களாக உபயோகிக்கலாம். இன்றுள்ள ஆராய்ச்சி நிர்ணயப்பிரகாரம் இந்த இரு உலோகங்களின் படிவுகள் யுகயுகாந்திரத்திற்கும் போதுமான அளவு உலகில் இருக்கின்றன.

ஜலவாயுபற்றிய சர்ச்சையில் பலர் மனதிலும் சலவாயுக் குண்டுபற்றிய நினைவே ஏற்பட்டது. ஆனால் இந்தியப்பிரதிநிதியாக விஜயம் செய்திருந்த டக்டர் பாபா ஜலவாயுவை இதர சக்திகளின் சேர்க்கை மூலம் கட்டுப்படுத்துவது இன்னும் இருபதாண்டில் சாத்தியமாகும் என்று குறிப்பிட்டார். இந்த அறிவித்தலையொட்டி ரசமான விவாதம் நடந்தது. இந்தச் சாதனை நடைமுறைக்குவருமானல் மனிதவர்க்கத்திற்குச் சக்தியை வரையாது அள்ளிவழங்கு மூலகங்கள் பல ஏற்படும்,

அணுசக்தியிலிருந்து ஏற்படும் கதிர்வீச்சுகளும் அவற்றால் ஏற்படும் அபாயங்கள் பற்றியும் விவாதிக்கப்பட்டது. கதிர்வீச்சுக்களின் அதிகரிப்பு மனித உடற் கூறுகளில் மாறுதல்களை உண்டாக்கி மனித வாழ்வைக் குறுக்கித் தறித்துவிடும் ஆபத்தை உண்டாக்கலாம். இதுசம்பந்தமாகத் தகுந்த பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கவும் விஞ்ஞானிகள் உறுதிகொண்டனர். அணுசக்தி கதிர்வீச்சு உணவுற்பத்தியை அதிகரிப்பதற்குப் பயன்படும் என்று பல சான்றுகள் காட்டப்பெற்றன.

உணவுப்பொருள்கள் கெட்டுப்போகாது பாதுகாக்கவும், உணவு மருந்துப் பொருள்களின் சத்துக் குறையாமல் வைத்திருக்கவும் இது பயன்படும்.

பயிர்களை அழிக்கும் கிருமிகளை ரசாயன விஷங்களால் கொல்லும்போது நன்மைதரும் பூச்சிகளும் அழிக்கப்படுகின்றன. ஆனால் அணுசக்தியை உபயோகித்தால் பூச்சிகளைக் கட்டுப்படுத்துவதில் பயன்தரும் முறைகளைக் கையாளலாம்.

பல மூலகங்களைச் சேர்க்கை மூலம் புதுப்பொருள்களாக்கும் பிளாஸ்டிக் முதலிய பொருள்களையும்செய்ய இது பயன்படும். மருந்து உற்பதி விஷயத்தில் அணுசக்தி மகத்தான முக்கியத்துவம் பெற்றுள்ளது. மனித உடல் எப்படி இயங்குகின்றதென்பதுபற்றிப் புதிய கண்ணோட்டத்தைக் கொடுத்திருக்கிறது. மூளையில் ஏற்படும் ஊறுகளை சத்திர சிகிச்சையில்லாமலே தீர்க்க ரேடியேஷன் பயன்படுகிறது.

சர்வதேச நெருக்கடியைத் தளர்த்த இத்தகைய மகாநாடுகள் அரும்பணிபுரிகின்றனவென்பது திண்ணம். விஞ்ஞானத்தை நாசத்தின் கருவியாககாமல் தடுத்துநிறுத்தி மனிதனது அறிவாற்றல்களை ஒன்றுதிரட்டி மனிதவர்க்கத்திற்கு உகந்ததும் இன்பம்கொழிப்பதுமான ஓர் உலகைக் கட்டிவளர்க்கும் சாதனையில் நாடுகளை ஒன்றுசேரவைக்கின்றன.

ஆக்கமோ அழிவோ எத்துறையிலாயினும் அறிவில் ஏகபோக உரிமைபாராட்டல் இல்லையென்றும் பிரகடனம் செய்துவிட்டன.

---

# செவ்வாய் தோஷம்

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன் சிறிது சுயநலமுஞ் சேர்ந்துகொண்டது.

"யாழ்ப்பாணத்திற் பெண்கள் படிக்கவேண்டும் என்றேதோ வாய்கிறையச் சொல்லுகிறார்கள், ஆனல் யாராவது மேற்படிப்புப் படித்துவிட்டால் அவள் வாழ்வு பெருஞ் சுமைதான்."

"ஏன் மிஸ்டர் மூர்த்தி, அவள் சிறிது சுதந்திரமாய் வாழ்வது உமக்குப் பிடிக்கவில்லைப்போலும்."

"சுதந்திரம் யாருக்கில்லை அம்மா. ஆனற் குடும்பம் நடத்தக்கூட உரிமையற்ற சுதந்திரம் அவசியமானதா? அது சுதந்திரமா அன்றி அடிமைத்தனமா??

"அடிமைத்தனம் என்றே வைத்துக்கொள்வோம்; அது யாராலேற்பட்டது? அதற்கு முழுதும் பொறுப்புடையவர் ஆண் சமூகத்தவர் அல்லவா?"

"அதற்கெல்லாம பிராயச்சித்தம் செய்து கொள்ள நாங்கள் முன் வந்து விட்டோம், அம்மணி" என்னும்போதே அவர் குரல் 'கணீ'ரென் றொலித்தது "நானுன்னையே மணம் செய்து கொள்கிறேன்" என்பதுபோற் பாவத் தொனித்தது.

பங்கஜம் நிலையை உணர்ந்துகொண்டு சிறிது விழிப்பானள்.

பத்தாண்டுகளுக்கு முன்னே மனைவியை இழந்து விட்ட ஞானமூர்த்திக்குச் சபலம் தலைக்கேறியது. தனது உடலுறுதியையும், மன வலியையும் மனத்துள் நினைந்து பாராட்டிக்கொடுத்தார், 'எனக்கென்ன நாற்பத்தைந்து வயதுதானே; இவளிலும் பார்க்க ஒரு பத்து வயது கூடியிருக்கலாம்; இப்படித் தகுதியில் இவளுக்கு வேறு வரன் கிடைக்குமா?'. என்று அவர் ஆசைக்கோட்டை பலத்த அத்திவாரத்துடன் எழுந்தது.

"ஆமாம், நீங்கள் தயாராயிருக்கலாம். அதற்கு நாங்களும் சிறிது சம்மதந் தரவேண்டும், பாருங்கள்."

அஸ்திவாரத்தில் ஆட்டம் காணும்போலத் தோன்றவே, தனது ஆசைப் புகைச்சல் முற்றையுங் கொட்டி மூச்சுத் திணறடிக்க நினைத்தார் ஞானமூர்த்தி. "நான் வெறும் வீராப்புக்குச் சொல்லவில்லை; உங்கள் போன்ற கல்வியறிவும், பண்பாடும் நிறைந்த மாதர் குடும்பத்திற் பங்கெடுத்துக் குடித்தனஞ் செய்யாதிருப்பது நாட்டிற்கு எவ்வளவு நஷ்டம். இவ்வளவு கல்வியறிவுடன் நீங்களே 'செவ்வாய் தோஷம்' போன்ற மூட நம்பிக்கைகளை விட்டொழிக்காமல் அதைக் கட்டிக் காத்து, விரதமனுஷடித்து, மதிப்புக்காட்டி நடந்தால் மற்றவர்கள் என்றுதான் திருந்துவது? நீங்கள் இப்பொழுது 'இம்' என் றொரு வார்த்தை சொல்லுங்கள்; நான் உடனேயே உங்களை......"

அவளது முகம் போன போக்கைப் பார்த்த ஞானமூர்த்தி செயலிழந்து படபடத்தார்.

கிரகணத்தினின்றும் விடுபட்ட சூரியனின் திடீர் வெளிச்சம் கண்களை ஒளியிழக்கச் செய்யுமே; அதுபோல அவள் சொற்கள் அவரை வெளிறச் செய்தன, அவரது சோடையெல்லாம் ஓடி ஒளித்தது.

"மிஸ்டர் ஞானமூர்த்தி."!

"சொல்லுங்கள், எதுவாயினும் கேட்கத்தானே இங்கு நான் வந்தேன்."

"செவ்வாய் தோஷத்திற்கும் குடும்பம் நடத்தும் பொறுப்பிற்கும் பயந்து நானிங்குவந் தொளித்துக்கொள்ளவில்லை, கொஞ்சந் தனிமையான சீவியத்தில் நிம்மதி காண ஆசைகொண்டு இங்கே வந்துள்ளேன். உங்கள் நல்ல பண்பிற்கு நான் நன்றி சொல்லுகிறேன். அனுதாபங் காட்டினீர்கள். நான் அந்த அனுதாபத்திற்குப் பாத்திரமானவளல்ல; என்மீது அனுதாபங் காட்டுபவரை எனக்குப் பிடிப்பதில்லை. கன்னி வாழ்விற் காணும் இன்பம் என்னைவிட்டென்றும் அகலாது."

கடைசியாய்த் தான் சேகரித்து வைத்திருந்த அம்பைச் சிறிது வேகமாகவே வீசினர் ஞானமூர்த்தி. "நீங்கள் மணஞ் செய்வதில்லை என்ற முடிபுக்கு முன்பே வந்துவிட்டீர்கள். பின் எந்தக் கணவனின் ஆயுட் பலத்தை நாடித் தங்கள் செவ்வாய் தோஷ நிவிர்த்திக்கு விடாப்பிடியாக இன்றும் செவ்வாய்க் கிழமை விரதம் அனுஷ்டிக்கிறீர்கள்?"

"எந்தக் கணவனின் ஆயுட் பலத்தை நாடி" இந்த வாக்கியத்தொடர் பங்கஜத்தின் ஐம்பொறிகளையும் இயங்காது தடுக்கும் விஷமூலிகையாய்ச் சுற்றிச் சுற்றி வந்தது.

— 5 —

டாக்டர் வந்து பார்த்தார். "அம்மா! கொஞ்சம் மனதை அலட்டிக்கொள்ளாது நிம்மதியாய்த் தூங்குங்கள், எல்லாம் காலையிற் சரியாகி விடும்."

தூக்கமருந்தை ஊசியாற் பாய்ச்சினார். "படித்தவர்களுக்கு நோய் வரவேபடாது. வந்தால் அவர்கள் மனநோய்க்கு வைத்தியம் பார்த்தபிறகு தானே உடல்நோய் ஆறும்," என்று முணுமுணுத்தவண்ணம் போனார்.

பங்கஜம் தூங்கிவிட்டாள். ஒரு பனந்தோப்பு.

கன்னங்கரேலென்ற இராக்கதர். பச்சை முடி கொண்டு ஆட்சிப்பீடமேறப் பவனி வருவதுபோலிருந்தது. நெருங்கி வந்தது படை. கொஞ்சங் கட்டை அரக்கன். பச்சைப்பசேலென்ற ஆடை போர்த்திருந்தான். வெள்ளைப்புள்ளிகள், அந்த ஆடைக்கு என்றும் அழகு பொழிந்து நின்றன. 'கம்' மென்று வாசனை வீசத் தொடங்கியது. நெருங்கி உற்று அவதானித்தாள்.

ஒரு கட்டைப்பனையை மூடிக் காட்டுமுல்லை படர்ந்து அணிசெய்தது. முல்லை மலர்களின் அழகும், மணமும் கொடியின் எழிலைப் பன்மடங்காய் விரித்துக் கட்டியங்கூறி நின்றன.

தோப்பின் வேலையாள் ஒருத்தன் கத்தியுங் கையுமாய், அசுரனுக்கசுரனாய்த் தோன்றினான். "இந்த முல்லைக்கொடியாள் தன் அன்புப்பிணைப்பால் காதற் பனையழகனின் உயிரையே வாங்கிவிடுவாளோ" என்றெண்ணினான் போலும்.

கொடிகளை வலித்தும், வெட்டியும், பறித்துக் கீழே சாய்த்தான்.

இல்லாளை இழந்த துயரில் பனை 'வெறிச்'சென்று பார்ப்போர் கண்களிற் பரிதாபக்கனை பெருக்கி நின்றது. கீழே வீழ்ந்த முல்லைக்கொடியானோ சிறிது காலம் தன் நாதனின் பாதங்களில் வெயில் உஷ்ணம் படாது காத்தாள். நீரைக் காயவிடாது பருக உதவினாள். இந்த உதவிகளுஞ் செய்ய முடியாத பருவத்தில் தானே அவனின் உணவாகி அவனுள் ஐக்கியமாகி வாழ்வின் பயனைத் துய்த்தாள்.

கண்விழித்த பங்கஜத்தின் முகந் தெளிந்து நிர்மலமாய்ப் பூரண எழிலுடன் பொலிவுற்றது, "கோபால் அத்தான் வாழ்வு மலரவேண்டி நான் எதுவுஞ் செய்யாவிடினும், அவன் ஆயுள் நீடிக்க எனது பருவமறிந்த காலந்தொட்டுச் செவ்வாய்க்கிழமைகளைச் சமர்ப்பித்து வருகிறேனே இதை என்னிடமிருந்து பறிக்க முனைவது யார்?"

கனன்ற செவ்வாய், சந்திரனாய்க் குளிர்ச்சிபொழிய அந்த எழிலை அனுபவித்த வண்ணம் கண்களை மூடினாள் பங்கஜம் புதிருக்கு விடைபெற்றுவிட்ட மனநிறைவுடன் மீளா நித்திரையில் ஆழ்ந்துவிட்டாள்.

---


## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. 3242/M. B.**

கொழும்பு மருதானை பொலீஸ் பிளாற் செல்லத்துரை இராமேஸ்வரம்
வழக்காளி

பகத்தேல் றோட்டு 33ஆம் ஒழுங்கை இல. 4.
தற்போது கொழும்பு கறுவாக்காடு அலெக்சாண்டர் பிளேஸ் இல. 65

1. சிவரும் பறுவதவர்த்தனி
2. இராமலிங்கம் மகாதேவா
3. செல்லாச்சி சண்முகம்

எதிராளிகள்

கொழும்பு டிஸ்திறிக் கோட்டில் 3242/ M. B. இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் நாலு துண்டுக் காணிகள், 1955ஆம் ஆண்டு நவெம்பர் (கார்த்திகை) மாதம் 5ஆந் திகதி (5-11-55) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் முறையே அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

**தீர்வைத் தொகை:**—முதல் வட்டி ரூபாய் 1343/உம், இதில் ரூபாய் 750/க்கு 24-4-52 திகதி தொடக்கம் 29-6-53 திகதி வரைக்கும் 100க்கு 12 வீத வட்டியும், பின் திகதி தொடக்கம்முழுத் தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100க்கு 5 வீத வட்டியும், கோட்டுக் செலவு ரூபாய் 243-47 சதமும்.

**காணிகளின் விபரம்**

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப்பகுதி மானிப்பாய்க் கோவிற்பற்று ஆனைக்கோட்டையிறை "விலான்களி அல்லது வைப்பன்" நிலப்பரப்பு 7ம் குளி 9ம். இது மானிப்பாய்உலாந்தா எஸ். முத்துக்குமார சுவாமியால் 18-11-1942இல் 21/42ஆம் இலக்கப்படத்தில் விந்தாரிக்கப்பட்டபடி எல்லை; வடக்கு, நவாலி—ஆனைக்கோட்டை றோட்டு. கிழக்கு, விசுவநாதர் செல்லத்துரையின் ஆதனம். தெற்கு, காராளபிள்ளை சண்முகம் பிள்ளையின் ஆதனம். மேற்கு, சே. சண்முகம்பிள்ளையின் ஆதனமும் ஆனைக்கோட்டை—மானிப்பாய் றோட்டும். இதடங்கலும்.

2. மேற்படி ஆனைக்கோட்டையிறை "விலான்களி அல்லது வைப்பன்" குளி 14·6உம், இது மானிப்பாய் உலாந்தா எஸ். முத்துக்குமாரசுவாமியால் 18-11-1942இல் 21/42-ம் இலக்கப்படத்தில் விந்தாரிக்கப்பட்டபடி எல்லை: வடக்கு, அருணாசலம் தம்பையாபெண்ணின் ஆதனம். மேற்கு, முருகேசுவின் ஆதனம். தெற்கும், கிழக்கும் ஆனைக்கோட்டை – மனிப்பாய் றோட்டு. இதடங்கலும்

3. மேற்படி மனிப்பாய்க் கோவிற்பற்று நவாலி தெற்கிறை "தைலன் தாழ்வு அல்லது கிழவன்பிரிவு" நிலப்பரப்பு 12. எல்லை: வடக்கும், கிழக்கும் வேலுப்பிள்ளை துரையப்பாவின் ஆதனம். தெற்கு, வாய்க்கால் (குளமும்) ஒழுங்கையும். மேற்கு நாகமுத்து பொன்னையாவுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். இதடங்கலும்.

4. மேற்படி நவாலி தெற்கிறை "பிரம்படி" நிலப்பரப்பு 18. எல்லை: வடக்கு, அன்னம்மாவின் ஆதனம். கிழக்கு, கதிரவேலு தேவசகாயத்தின் ஆதனம். தெற்கும், மேற்கும் தம்பையா குணரத்தினதிற்கும் சொர்ணலிங்கம் சிவபாக்கியத்திற்கு முரிய ஆதனம். இதடங்கலும்.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner & Licensed
Auctioneer

தெல்லிப்பழை. 2-5-55

## மாமா மறுமொழி

இ. தருமலிங்கம் (1332) பாலர் பகுதி அங்கத்தவர்கள் எழுதும் விஷயங்கள் தகுதிவாய்ந்தனவாயின் பிரசுரிக்கப்படும்.

யூ. எஸ். எம். ஹனிபா (1167) 'மகாகவி அல்லாமா இக்பால்' என்னும் விஷயம் கிடைத்தது.

மருமக்களுக்கு:

உங்கள் விஷயங்களை நான் நன்கு பரிசிலனை செய்து திருத்தி வெளியிடுவேன். உடனடியாக அவை வெளியாகும் என எதிர்பார்க்கவேண்டாம். தகுதி வாய்ந்த விஷயங்கள் பாலர் பகுதியில் இடம்பெற்றே தீரும்.

## தண்டனை

சி. சர்வேஸ்வரலிங்கம் (1291)

ஒன்பது மணி இருக்கும். மழையின் காரணத்தால் அதிகமானோர் தாமதித்து வந்தார்கள். ஒரு மணி கழித்து உபாத்தியாயர் தமது வகுப்பறையை நாடிச் சென்றுகொண்டிருந்தார். அவரது வகுப்பு மாணவர்கள் சப்தம் செய்வது அவர் காதிற் கேட்டது

அவர் மாணவர்களை மேஜைமேல் ஏறும்படி கட்டளையிட்டார். கோபம் கொண்ட அவர் ஒவ்வொரு மாணவனையும் "யார் சப்தம் போட்டார்கள்?" என்று அவர் கேட்டார். சோமு இராமுவைச் சுட்டிக் காட்டி "இவன்தான் அதிகமாகச் சப்தம் செய்தான்" எனப் பதிலளித்தான்.

ஒன்றும் அறியாத அந்த ஏழைச் சிறுவனின் கண்களிலிருந்து நீர் வடிந்து ஓடிக்கொண்டிருந்தது. அவனும் பேசாது மரம் போல் நின்றவண்ணம் உபாத்தியாயரை நோக்கினான். உண்மையில் இராமு ஒரு நல்ல சிறுவன். தன் நண்பர்களை நேசித்தான். சோதனைகளிலே அதிக புள்ளி எடுக்கும் அவன்மேல் சோமு பொறாமைகொண்டிருந்தான். எனவே இராமுமீது பொய்க் குற்றம் சாட்டினான் கோபம் கொண்ட உபாத்தியாயர் அவனைப் பிரம்பால் பலமாய் அடித்தார். வாயில்வந்தபடி அவனை ஏசித்துன்புறுத்தினார். இராமு எதிர்த்து ஒன்றும் சொல்லவில்லை. சோமுதான் சப்தம் போட்டான் என்றும் சொல்லவில்லை. மற்றவர்களும் சோமுவுக்குப் பயந்து பேசாதிருந்தனர்.

நேரமோ மாலை நாலு மணியிருக்கும். சோமு வீட்டிற்குச் செல்வதற்காகத் தனது மோட்டார் வண்டியில் ஏறினான். "சோமு" என்ற சப்தம் வரும் இடத்தை நோக்கினான். தன் உபாத்தியாயர் மழையில் ஓடிவருவதைக் கண்ணுற்றான். "தன்னைத் தன் மனைக்குக் கொண்டுபோய் விடும்படி அவனிடம் கேட்டுக்கொண்டார். அதற்குச் சோமுவும் இசைந்தான். மோட்டார் வண்டி வீதியில் அதி வேகமாய்ச் சென்றுகொண்டிருந்தது. சிறிதுநேரம் சென்றபின் மோட்டார் வண்டி தெருவை விட்டு விலகி ஒரு மரத்துடன் மோதிய காரணத்தால் எல்லோரும் வெளியில் வீசப்பட்டனர். ஈற்றில் அவர்கள் மூவரும் (சாரதி உட்பட) அபாயமான நிலையில் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். அறிவு வந்தபொழுது சோமு தான் இராமுவுக்குச் செய்த பொய்க் குற்றத்தைப் பக்கத்தில் வேதனையால் படுத்திருக்கும் உபாத்தியாயருக்கு எடுத்துரைத்தான். இனி என்ன செய்வது? இருவரும் இராமுவிடம் மன்னிப்புக் கேட்டனர், நாளடைவில் அவர்களும் சுகம்பெற்றனர். இதன்பின் உபாத்தியாயரும் மாணவன் சோமுவும் ஏழைகள் மீது இரக்கங் காட்டுவதென முடிவு செய்தனர்.



# பாலர் பகுதி



அருமையான மருமக்களே!

யாழ்ப்பாணத்திற் சென்ற 29-9-55 தொடங்கி மூன்று நாட்கள்வரை நடைபெற்ற உலக நாடுகளின் ஒப்பற்ற காட்சிகளை எனது மருமக்கள் பலர் பார்த்து மகிழ்ந்திருப்பார்கள் என்று எண்ணுகின்றேன்.

யாழ்ப்பாணம் வேம்படிப் பெண் பாடசாலையில் இவ்விழா நடைபெற்றது. பல நாட்டுடைகளிற் பாடசாலைச் சிறுமியர் பலர் காணப்பட்டனர் திறப்பு விழாவன்று நடைபெற்ற அணிவகுப்பில் ஒவ்வோரு நாட்டுத் தேசியக் கொடிகளையும் அவர்கள் தாங்கிக்கொண்டு நின்றார்கள். யப்பானியப் பெண்களைப்போல உடைதரித்து நின்றவர்களை மாமி வைத்தகண் வாங்காது பார்த்துக்கொண்டு நின்றார்.

ஒவ்வொரு தேசமும் ஒவ்வொரு அறைக்குள் காட்சி தந்தது. அரேபியா நன்கு அமைந்திருந்தது. அதை என்னால் மறக்கவே முடியவில்லை.

ஒவ்வொரு நாட்டைப் பற்றியும் தனித் தனி யெழுதுவதானால் நீண்டுகொண்டே போய்விடும். மொத்தத்தில் உலக நாடுகளின் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகவே யிருந்தது. மருமக்களின் உடையலங்காரம் மிக மிக அற்புதம்.

கேசரி மாமா

## குமாரின் கனவு

எம். நவரத்தினம் (1048)

மனதிலே அமைதியின்றி, வாழ்க்கையிலே இன்பமின்றி, எண்ணத்தின் இன்ப வர்ணங்கள் காலமென்னும் நீரினால் கழுவப்பட்டு வெறுந் திரையாகக் காட்சியளிக்க, காடு மேடுகளின் கஷ்டங்களைக் கவனியாமல் ஓடுகிறான் குமார். தன் தாய் தந்தையரின் வயிற்றைப் பசி என்னும் கொடிய அரக்கனிட மிருந்து காப்பாற்ற எண்ணினான். தந்தையின் கடனைத் தீர்க்கவே கஷ்டப்பட்டான்! படித்தும் பட்டம்பெற்றும் பயனில்லை. அவனுக்கு வேலையில்லை. நாட்டில் வேலைகள் இல்லை.

"வேலை காலியில்லை" என்று விளம்பரம் செய்திருப்பதையே கண்டான். இத்தகைய நாட்டில் அவன் வாழ வழி தெரியவில்லை. உலக வாழ்க்கையை வெறுத்து ஓடிக்கொண்டிருந்தான். தன்னலமில்லாத அவனது வாடிய கண்கள் ஒரு பாழ்ங் கிணற்றைக் கண்டன. உடனே அவனது மனம், "நீ எங்கே ஓடுகிறாய்? நீவிரும்பியபொருள் இங்கே இருக்கின்றது போ! உனது எண்ணத்தை நிறைவேற்று. உனக்கு இவ்வுலகில் அமைதியில்லை. ஆதலால் அக்கிணறு உனக்கு அமைதியை அளிக்கக் காத்திருக்கிறது. ஆம்! உன்னைப்போன்ற ஏழைகளுக்கு 'இறத்தல்'தான் அமைதியைக்கொடுக்கும், போ!" என்று உரத்துக் கத்தியது. 'நான் தற்கொலையா செய்யவேண்டும்?" என்று அவன் சற்றுத் தடுமாற்றத்துடன் கூறினான். "இதற்குத்தானே இங்கே ஓடி வந்தாய்? ஏன் தயங்குகிறாய்? ஊம்!" என்று அவனின் வேதனைப்பட்டமனம் ஆத்திரத்துடன் அலறியது. "ஆம்! நான் இதோ இறக்கிறேன்" என்று கோபங்கொண்ட சிங்கம்போலக் கிணற்றுக்குள் பாய எத்தனித்தான்.

அப்பொழுது ஒருமுனிவர் அவனைப் பிடித்துக்கொண்டார். அவன் ஆத்திரத்துடன் முனிவரை நோக்கினான். கருணைக் கண்களால் முனிவர் அவனை நோக்கி, "மகனே! உன்னையே நீ வெறுத்த காரணம் எனக்குத் தெரிந்துவிட்டது. உலக வாழ்வில் இன்ப துன்பம் வருவது நியதிதான். 'வாழ்வது போனாலும் வறுமையே வந்தாலும் நீ துயர் கொள்ளாதே!' என்று பெரியோர் உரைத்துள்ளார்கள். வாழ்வில் பாம்புகள் படமெடுத்தாடினாலும், சிங்கங்கள் சீறி விழுந்தாலும் மனத்தைத் தளரவிடாமல் வாழவேண்டும். சிறந்த முறையில் வாழ்ந்தால் அதுவே போதும். சென்று உனது தாய் தகப்பனைத் தேற்றி, ஊக்கத்துடன் உனது வேலை தேடும் படலத்தைத் தொடர்ந்து நடத்து" என்று முனிவர் உபதேசஞ் செய்தார். குமார் யோசித்தான். தான் செய்ய எண்ணியது மகா பாதகம் என்று அவன் ஊகித்துணர்ந்து, "சாமியாரே! என்னைப் பத்து மாதம் சுமந்து பெற்ற தாய்க்கு வேதனை கொடாமல் என்னைக் காப்பாற்றினீர்கள். நான் இறந்தால அம்மா வேதனைப்படுவாள். என்னை அறிவுள்ளவனாக்கி விட்டீர்கள். வணக்கம் சாமியாரே! உங்கள் புத்திமதியை என்றும் மறக்கமாட்டேன்" என்றான்.

"அடே குமார்" என்ற சப்தம் கேட்டுக் குமார் விழித்தான். அவன் பக்கத்திற் தாய் நிற்பதைக் கண்டான். தான் அவ்வளவு நேரமும் கண்டது கனவென்பதை உணர்ந்தான்.

## இன்பத் தமிழ்

க. காந்தமலர் (1309)

பண்டைக்காலந்தொட்டு அறிவு நிரம்பிய பெரியார்களாலும் மற்றும் உலக மக்களாலும்போற்றி வளர்க்கப்பட்டுவந்தது தமிழ் மொழி. எம் தாய்மொழியாம் தமிழ் மொழியைப் போற்றி வருதல் தமிழராகிய எங்கள் கடனாகும்.

நாம் இம் மண்ணிலே பிறந்தவுடன் முதன் முதலாகக் காண்பது நமது அன்னையைத்தான். அதே போன்று தமிழர்களாகிய நாம் முதல் முதலாகப் பேசப் பழகுவது இனிமையான தமிழ் மொழியைத்தான். குழந்தையாக இருக்கும்போது நாம் அழுதால் எமது அன்னை இனிமையான தமிழில் தாலாட்டுப் பாடி நம்மை உறங்க வைத்தாள்.

நம்மைப் பெற்றவள் படும் கஷ்டம் போன்றதுதான் தமிழன்னை படும் கஷ்டம் என்பதை நாம் உணரவேண்டும். தமிழுக்குச் செய்யும் துரோகம் நமது அன்னைக்குச்செய்யும் துரோகமாகும். மற்றும் மொழிகளும் நமக்கு வேண்டுவனதான். மற்ற மொழிகளைப் பேசவும், எழுதவும், வாசிக்கவும் மாத்திரம் கற்றால் போதும். ஆனால் தாய் மொழியில் கற்கவேண்டியது எத்தனையோ இருக்கின்றன. அந்நூல்களின் பெருமையை அறிந்த அந்நியரும் எத்தனையோ மொழிகளில் அவைகளை மொழி பெயர்த்திருக்கிறார்கள். அவைகளையெல்லாம் நாம் தெளிவுறக் கற்று மனதில் பசுமரத்தாணிபோல் பதிய வைக்கவேண்டும். கற்பதனால் நமது வருங்கால வாழ்க்கையில் புகழையும் பெருமையையும் அடையலாம்.

தமிழின் பெருமையையும் சிறப்பினையும் உணர்ந்துதான் பாரதியார்:

'யாமறிந்த மொழிகளிலே
தமிழ்மொழிபோல்இனிதாவ
தெங்கும் காணோம்''

என்று பாடியுள்ளார். இப்பெரியார்களால் போற்றப்பட்ட நந்தமிழ் மொழியை நாம் உதறித் தள்ளுவது நீதியாகுமா? நியாயமாகுமா? பெருமை நிறைந்த தமிழர் குலத்திற்கே இழி

(தொடர்ச்சி 12ஆம் பக்கம் பார்க்க)

## புதிய மருமக்கள்

க. குணமணி (1325) தாமரக்கேணி, மட்டக்களப்பு.

க. செல்லம்மா (1326) c/o கந்தையா, அமிர்தகழி, மட்டக்களப்பு.

கு. தம்பிமுத்து (1327) ஊறணி, மட்டக்களப்பு.

செகநாதன் நல்லையா (1328) ஸ்ரான்லி மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்.

ம. தெய்வேந்திரம் (1329) இல. 30 + 32, வெளிமடை.

செ. குணரத்தினம் (1380) சங்கத்தானை.

பு. நவரத்தினம் (1331) சாந்தி, ஊரெழு, சுன்னுகம்.

இ. தருமகுலசிங்கம் (1332) யூனியன் கல்லூரி, தெல்லிப்பளை.

என். எம். ஸவாஹிர் (1333) 39, இராஜவீதி, மாத்தளை.

க. கந்தசாமி (1331) நாவற்குளி, கைதடி.

எஸ். ஐ. தஸ்தக்சீர்பாபா (1330) 452, மெயின்வீதி, மாத்தளை.

### விண்ணப்பப் பத்திரம்

ஈழகேசரி — பாலர் பகுதி

கேசரி மாமா, ஈழகேசரி, சுன்னுகம்.

அன்புள்ள மாமா,

தயவுகூர்ந்து என்னை ஈழகேசரி—பாலர் பகுதியிற் சேர்த்துக்கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

முழுப்பெயர்: ______________________

விலாசம்: ______________________

______________________

பிறந்த திகதி ______________________

______________________

தந்தையார் அல்லது ஆசிரியா ஒப்பம்

T'Phone No. 805

Registered at the G. P. O. as a Newspaper

26TH YEAR OF PUBLICATION

EELAKESARI

NATIONALIST TAMIL WEEKLY
Largely Circulated in Ceylon, India, Burma, Federation of Malaya & Singapore
Founder: N. PONNIAH

Vol. 26 | Chunnakam Sunday, Oct.. 9, 1955 | No. 15

# மோதல்கள் ஏற்படுமா?

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நம் இருப்பது உண்மையா, இல்லையா என்பதைப் பார்த்தே தெரிந்து கொள்கிறோம். இலங்கையிலே சிங்களமும் தமிழும் சம அந்தஸ்து வகிக்க வேண்டுமென ஆட்சியாளர் கூறுவது உண்மையானால் அரசியலமைப்புச் சட்டத்திலே அவ்வாறு ஒரு திருத்தம் கொண்டுவரட்டும்; அவர்கள் கூறுவது உண்மைதான் என்பதை ஒப்புக் கொள்கிறோம். வைரம இருக்கிறது என்று வார்த்தையாலே சமாளித்துவிட்டுக் கையைத் திறக்காமலேயே இருக்கும் இவர்களிடம் 'வைரம் இருக்கிறதா' என்பதே சந்தேகம் தான்''. இவ்வாறு சென்ற ஞாயிறன்று சைவமங்கையர் கழகத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்திற் பேசிய பீர் முகமது அவர்கள் குறிப்பிட்டார்கள்.

### சட்டத்தைத் திருத்துக

இலங்கையிலே தமிழ் மொழிக்கும் சிங்களத்துடன் சரியாசனம தரும் வகையிலே அரசியற் சட்டம் திருத்தப்பட வேண்டுமென்று குரலெழுப்பும் நோக்கத்துடன் அகில இலங்கைத் தமிழ்ச் சங்கத்தின் ஆதரவில் இப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. சிங்களம்தான் அரியணையில் அமரவேண்டும்; தமிழ் வேண்டாம், என்ற கூக்குரல் நாடெங்குமிருந்து எழுந்து வரும் இந்தத் தருணத்திலே, ஒரு மொழிக் கொள்கையை ஆதரிக்கும் அரசியற் பெருமான்களின் பொதுக்கூட்டங்களிலே தமிழ் ஒதுக்கத் தீர்மானங்கள் சரியானபடி நிறைவேற்றப்பட்டு வரும் இந்நாட்களிலே இங்குள்ள தமிழ் மக்களின் அபிப்பிராயத்தை வெளியிடுவதற்குச் சிறந்ததொரு வாய்ப்புத் தந்தது இப் பொதுக் கூட்டம் என்று சொல்லலாம்.

### சரியாசனம்

சங்கத் தலைவர் வித்துவான் வ. மு. கனகசுந்தரம் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் மொழிச் சிக்கலை யிட்டுப் பலர் பேசினார்கள். சிங்களத்தோடு தமிழுக்கும் இந்நாட்டிலே சரிநிகர் சமானமான சந்தர்ப்பம் அளிக்கப்பட்டால், தமிழ் சிங்களத்தை விழுங்கிவிடும். சிங்களம் அழிந்துபட்டுவிடும் எனச் சிலர் கூறுவது எவ்வளவு அர்த்தமற்றது என்பதைப் பேச்சாளர் ஒருவர் எடுத்துக்காட்டினார். இன்று கூடச் சிங்களத்தில் 25சதவீதமான சொற்கள் தமிழ்ச் சொற்களாக இருக்கும் போது, தமிழும் சிங்களமும் ஒருங்கு வாழுதல், சிங்களத்தின செழிப்புக்கு பேருதவி செய்யும் என்பதை அவர் எடுத்துக்காட்டினார். வளம் குறைந்த மொழியான சிங்களம் தமிழ்ச் சகவாசச் சீர்மையினால். புத்தொழியும், புதுமெருகும் பெற்றுத் திகழ வழி இருக்கும்போது தமிழ் சிங்களத்தைப் பூச்சாண்டி காட்டி வெருட்டி ஒடுக்கி அடக்கிவிடும் என்பதில் உண்மையின் கலப்புக் கிஞ்சித்தேனும் கிடையாது என விளக்கினார் அவர்.

### நியாயமானது

பல கோணங்களிலுமிருந்து நோக்கித் தக்க காரணங் கொண்டு தமிழ்ச் சமத்துவக் கோரிக்கை நியாயமானது என்பதை நிறுவிய இப் பொதுக் கூடடம், இரு தீர்மானங்களை ஏகமனதாக நிறைவேற்றிற்று. தமிழுக்கு இலங்கை முழுவதிலும் சம அந்தஸ்து வழங்கவேண்டுமென்பதும் பாராளுமன்றம் கலைக்கப்படுமுன் இன்றுள்ள தமிழ்ப் பிரதிநிதிகள், அரசியலமைப்புச் சட்டம் திருத்தப்படுவதற்கான காரியங்களைத் தாமதியாது செய்யவேண்டுமென்பதுமே அத் தீர்மானங்களின் உள்ளுறை.

இப் பத்திரிகையில் வெளியாகும் ஹாஸ்யக் கட்டுரைகள், கதைகளில் வரும் பெயர்கள் கற்பனைப் பெயர்களே. கட்டுரையாளர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்

சந்தா விபரம்

ஆண்டுச் சந்தா:

| | |
|---|---|
| இலங்கை-இந்தியா | ரூ.6 00 |
| மலாயா — | $ 6-00 |
| தனிப்பிரதி ச. 10. | காசு 10 |

# கொழுகொம்பு

(9ஆம் பக்கத் தொடர்ச்சி)

குக் கடிதம் எழுதவேண்டுமென்பது ஒன்று.

இரண்டாவது என்னதான் கஷ்டம் வந்தாலும் கனகத்தைக் கைவிடுவதில்லை. ஆனால் அதே நேரத்தில் தன் மாமனார் வீட்டில் அடியெடுத்தே வைப்பதில்லை.

இதற்குள் வான் கொழும்பை யடைந்துவிட்டது நடராஜன் தன் பெட்டியைத் தூக்கிக்கொண்டு இறங்கினான் "தன் தந்தை யாருக்கு என்ன செய்வது? தன் தலை போகிறகாரியமாக இருந்தாற்கூடக் கனகத்திற்கும் தனக்கும் கல்யாணம் ஆவதை அவர் அனுமதிக்க மாட்டாரே"; என்றெண்ணியபோது நடராஜனின் தலை மீண்டும் சுற்றியது. மனங் குன்றிப்போய் அந்த விடுதியின் விருந்தையிலிருந்த கதிரைக்குள்ளேயே ஒடுங்கிவிட்ட நடராஜனுக்குத் தந்திச் சேவகன் தந்தி ஒன்றைக் கொண்டுவந்து கொடுத்தான்.

—தொடரும்

## 407 கொலை

இவ்வருட ஆரம்பத்திலிருந்து இலங்கையிலே 10 மாதங்களிற் கொலையுண்டோர் தொகை 407. சென்றவார இறுதிக்குள் 8 பேர் பலாத்காரமாகக் கொல்லப்பட்டதாகவும் 4 பேர் விபத்துக்களில் உயிரிழந்ததாகவும் தெரிகிறது.

ஆண்மைக்கு வரவேற்பளியுங்கள்!

தங்கபஸ்பம் காமகேசரி லேகியத்துடனும், மன்மத கோலாகல குளிகையுடனும சாப்பிடுங்கள்!

நித்திரையின்மை, கண் மங்கல், நரம்புத்தளர்ச்சி, ஓய்ச்சல், அசதி, வேலைசெய்யப் பற்றில்லாமல் உடல் சோர்வு, இரத்தமின்றி உடல் இளைத்து வெளுத்துப்போதல், தேகம் மெலிதல், நடுக்கல், ஞாபக மறதி, மலபந்தம், அஜீரணம், பித்த மயக்கம், இடுப்பு வலி இவைகளைக் கண்டிப்பாகக் குணப்படுத்தும். ஸ்திரீ வியாதிகளான வெள்ளை, வெட்டை, பித்த பாண்டு முதலிய பலவித நோய்களையும் கண்டித்தும் பலவீனத்தையும் போக்கும். தங்கபஸ்பம் இணையற்ற காய கல்பமாகும். ஸ்திரீகளும் சாப்பிடலாம்.

குறிப்பு:— தங்க பஸ்பத்தைச் சாப்பிடுமுன் சுகபேதி ஹல்வாவைச் சாப்பிட்டு மலக் குடலைச் சுத்தம் செய்து சாப்பிட்டால் மேற் சொன்ன வியாதிகளைக் கண்டிப்பாய்க் குணப்படுத்தும்.

| | |
|---|---|
| 'தங்க பஸ்பம்' 1 புட்டி ... ... | ரூ. 25-0-0 |
| காமகேசரி லேகியம்: மன்மத கோலாகல குளிகையுடன் | ரூ. 10-0-0 |
| 'சுகபேதி ஹல்வா' (மலக் குடலைச் சுத்தம்செய்வதற்கு) | ரூ. 1-0-0 |
| தபாற் செலவு தனி | ரூ. 1-12-0 |
| "மதன லேபம்" புட்டி 1க்கு விலை ... | ரூ. 4-8-0 |
| 3 மருந்துகளின் செட் 1க்கு தபால் செலவு | ரூ. 1-12-0 |

ஏஜெண்டுகள் தேவை. சிலோன் அன்பர்கள் கிராஸ் செய்யாத B. P. O. அனுப்பவும்.


PARADISE AGENCY, (N. C.)
CHOOLAI, MADRAS, INDIA.

# இன்பத் தமிழ்

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

வைத் தரும் செயலாகுமல்லவா?

தமிழர்களாகிய நாம் இம் மொழியைத் தெய்வமாகப் பூசிக்கவேண்டும். தமிழுக்காகப் பாடுபடுவதே நமது வாழ்க்கையின் இலட்சியமாகக் கொள்ளவேண்டும். "தமிழுக்கு அமிழ்தென்று பேர்; அந்தத் தமிழ் இன்பத் தமிழ் என் உயிருக்கு நேர்" என்று பாரதிதாஸன் சொன்னது போல் நமது உயிர் போன்ற தமிழை நமது உயிர்போல் நேசித்தல் வேண்டும்.




இப் பத்திரிகை, இதன் சொந்தக்காரருக்காக, யாழ்ப்பாணம் — குரும்பசிட்டி, முந்தையா - சபாரத்தினம் அவர்களால் சுன்னாகம் 'தலையாட்டி'யிலுள்ள திருமகள் அழுத்தகத்தில் 1955ஆம் ஆண்டு ஒக்டோபர் 9ஆந் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.